

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கார்த்திகை - மார்கழி
டிசம்பர் - 2020

மலர் 9 இதழ் 12


பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 8 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்யாமளா தண்டகம் | 13 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 14 |
| தமிழ் பாகவதம் | 18 |
| மார்கழி மாத விசேஷ தினங்கள் | 21 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 31 | 22 |
| ஸமஸ்கிருத மாநில மகாநாடு | 26 |
| இறைவனை நம்புவதற்கு ஏழு காரணங்கள் | 30 |
| கௌசல்யா கவசம் | 35 |
| புராணக்கதை | 37 |
| வேதாந்த ஸாரம் | 39 |
| மகாபாரத சுருக்கம் | 40 |
| அத்வைத வினா - விடை | 42 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 44 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்









ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

இருட்டைக் கண்டால் எல்லாருக்கும் பயம். குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை இருட்டு என்றால் பயம். வெளிச்சம் மகிழ்ச்சியைத் தருகிறது. உண்மையில் நாம் விரும்பும் வெளிச்சம் வெளிச்சம் தானா? இருட்டிலாவது உறங்கி விடுகிறோம். வெளிச்சத்தில் மக்கள் செய்யும் கார்யங்கள், நல்ல கார்யங்களா? எவ்வளவு அதர்ம கார்யங்கள் உண்டோ அத்தனையும் செய்கின்றனர். தினசரி பத்திரிக்கைகளைப் பார்த்தால் மனம் குமுறுகிறது.

வெளிச்சம் என்று எதைச் சொல்கிறோமோ அதில் நடக்கும் கார்யங்களைப் பார்த்தால் அதுதான் இருட்டோ என்று தோன்றுகிறது. உண்மையான தர்ம வெளிச்சம் நோக்கி மக்கள் போகமாட்டார்களா? நிற்க. தத்வ ரீதியில் பார்த்தாலும் நாம் பார்க்கும் வெளிச்சம் வெளிச்சமில்லை. ஸத்யத்தை அறிந்தவன் ஞானி. அவனுக்கு இந்த லௌகிக வெளிச்சம் இருட்டு. பகவான் சொல்கிறார்.

***''யா நிசா ஸர்வபூதானாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ***
***யஸ்யாம் ஜாகர்தி பூதானி ஸா நிசா பஸ்யதோ முனே: ।।''***

அனைத்து உயிர்களுக்கும் எது இரவோ அதில் ஞானிக்கு விழிப்பாக உள்ளது. எதில் உயிரினங்கள் இன்பத்துடன் விழித்துள்ளனவோ பரமாத்ம தத்வத்தை உணர்கின்ற முனிவருக்கு அது இரவு ஆகிறது.

எப்படிப் பார்த்தாலும் கும்மிருட்டில்தான் மக்கள் இருக்கிறார்கள். லௌகிகத்தில் தர்மம், ஒழுக்கம், நேர்மை இவைகளைக் கடைபிடித்தலே முதல்படி. தத்வ ரீதியாக மனிதனுக்கு ஞானம் வருகிறதோ இல்லையோ ஸனாதன தர்ம ஒழுக்கம் ஓரளனவேனும் வெளிச்சத்திற்கு இட்டுச் செல்லும். இல்லையெனில் இந்த இருட்டையே வெளிச்சம் என்று நினைத்துக் கொண்டு தமஸில் ஆழ்ந்து அழிய நேரிடும். அப்படி எதுவும் நடக்கலாகாது என்பதற்காகத் தான் நம் மதம் சின்ன சின்ன விஷயங்கள் மூலமாக நம்மை உயர்த்துகிறது. கார்த்திகை மாதம் விளக்கேற்றும்போது சொல்லும் ஸ்லோகம் இதை உணர்த்தும்.

***''கீடா பதங்கா பசவச்ச வ்ருக்ஷா:யே ஸ்த்லே ஜலே நிவஸந்தி ஜீவா:***
***த்ருஷ்ட்வா ப்ரதீபம் ந ச ஜன்ம பாஜா பவந்தி நித்யம் ஸ்வபசா ஹி விப்ரா:***

ஏற்றப்படும் இந்த தீபத்தின் வெளிச்சம் கொசு, பூச்சி, மரங்கள் மற்றும் தரை, நீர் வாழ் உயிரினங்கள் எதுவாயினும் அவைகளுக்கு மோக்ஷத்தை அளிக்கட்டும். எப்பேற்பட்ட

உயர்ந்த உள்ளம். தன்னைவிட தாழ்ந்த இனமாயினும் மோக்ஷத்துக்கு உரியதாக்குகிறது நம் மதம். கவி கண்ணதாசன் சொல்கிறார்:

*''விளக்கேற்றி வைக்கிறேன் விடிய விடிய எரியட்டும். நடக்கப் போகும் நாட்களெல்லாம் நல்லதாக நடக்கட்டும்''*

அதுபோலவே மக்கள் கார்த்திகைத் திரு நாளில் ஏற்றும் தீபம் அவர்களுக்கு அற வழியைக் காட்டட்டும். இருட்டிலிருந்து ஒளியை நோக்கி போக வைக்கட்டும். தர்ம சிந்தனையை கூட்டட்டும்.

## மனு நாதம்

ஒரு முறை ஜுரம் வருவதுபோல் நம் தமிழகத்தில் ப்ரதி வருஷம் சனாதன தர்மத்தை இகழ்ந்து பேசுவது வழக்கமாகி விட்டது. இம்முறை மனு மாட்டிக் கொண்டுள்ளார். மனுவை விமர்சிப்பவரும் அவர்களை விமர்சிப்பவர்களும் யாரும் மனுவைப் படித்ததில்லை என்பது அவர்களது அறிக்கைகளின் மூலமாகத் தெரிகிறது.

***யத்கிஞ்சித் மனுரவதத் தத் வை பேஷஜம்*** என்பது தைத்ரீயத்தின் வாக்யம். மனுவின் சொல் மருந்தாகும். என்பது அதன் பொருள்.

எல்லா தர்ம சாஸ்த்ரங்களுக்கும் ஆதாரமாக விளங்குவது மனு தர்ம சாஸ்த்ரமே. நம் நாட்டில் மட்டுமல்லாமல் பர்மா, தாய்லாந்து, கம்போடியா, மலாயா, இண்டோனேஷியா, பாலி, ஜப்பான், இங்கே எல்லாம் உள்ள சட்டங்கள் மனுதர்மத்தை அடிப்படையாக கொண்டவையே. ''கரட மானவா'' என்பது கம்போடியாவின் சட்ட நூலுக்குப் பெயர்.


பிலிப்பைன்ஸ் நாட்டில் மனுவுக்கு பெரிய சிலை சட்டக் கல்லூரியில் வைத்துள்ளார்கள். நம் நாட்டில் வழங்கும் அனைத்துச் சடங்குகளும் நாமகரணம் திருமணம், உபநயனம், பஞ்சமாஹாயஞ்யம், பிதுர் கடன்கள், அபரம் என்று சொல்லப்படும் இறுதிச் சடங்குகள் இன்னும் பல அவர் கூறியபடித்தான் இன்றளவும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

எல்லா வர்ணத்தாரும், ஜாதியனரும் மனு சொல்படித்தான் தெரிந்தோ தெரியாமலோ நடக்கிறார்கள். மனுவின் தாக்கம் எல்லா தர்ம சாஸ்த்ரங்களிலும் ஒளிரும். மருந்தாகி இருப்பதால் அவர் சொல் கசப்பாகத்தான் இருக்கும். இருப்பினும் அவரது ஆழ்ந்த அகலமான பார்வையை புறம் தள்ள முடியாது. அவரை எதிர்ப்பவரும் ஒத்துக் கொள்பவரும் அவரது ஸர்வ வ்யாபகத்வதை நீட்சியை மறுக்கமுடியாது. தனி மனித ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம், eugenesis என்னும் களங்கமில்லா வம்சம், சட்டம்

அரசாட்சி தண்டனை முறைகள் இன்னும் பல விஷயங்களில் அவர் தன் ஆளுமையை காட்டுகிறார். வாசகர்கள் 2012 ப்ரதீப இதழ்களில் மநு வசனம்'' என்னும் பெயரில் வந்த குறிப்புகளை பார்க்கவும். மனு நாதம் அடி நாதமாக இன்றும் உள்ளது என்று கூறி கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் சமர்ப்பிக்கிறோம். நல்ல மொழி பெயர்ப்பை படிக்க வெண்டுமெனின் ஸ்ரீத்ரிலோக சீதாராம் அவர்களின் நூலைப் படிக்கவும்.

கடந்த இரண்டு மாதங்களாக வெளிவந்த தச பஞ்ச தான கட்டுரையில் Software incompatibility என்னும் விஷயத்தால் அச்சில் சில தவறுகள் ஏற்பட்டுள்ளன. அவைகளை திருத்தி அச்சிடுகிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.

ஆ.ர்



இது, உலகத்தையே சேத்த ஒரு தேசம். உலகத்தயே ஈர்த்த ஒரு தேசம். இன்னிக்கி குடும்பத்த சேக்கறதே பெரிய விஷயமாயிருக்கு.

வளர்ச்சின்னா என்ன? வருஷத்துக்கு அஞ்சு துணி உபயோகப் படுத்திருந்த வா, பதினைந்து துணி உபயோப் படுத்தறதுதான் வளர்ச்சின்னு நெனச்சிக்கறதா? செலவழிக்கறதுதான் வளர்ச்சின்னு நெனச்சிக்கறதா?

Computer பத்தி Generation நம்ப சொல்றோம். சாஸ்த்ரங்கள பத்தின Generation – ன எப்படி காப்பாத்தறது?

மொத்தத்துல என்னன்னா, India வளரும்போது, தர்மம் தளர்ந்திடக் கூடாது. தர்மத்த வெச்சிண்டு India வளரணும். தர்மத்தோட சேந்து India வளரணும்.

# Á s k ì ÷uõzµ®

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**



இப்பேர்ப்பட்ட பக்தி எங்கே? கஷ்டம் தீருவதற்காக பகவானை ப்ரார்த்திக்கிற ஆர்த்தனின் பக்தி எங்கே? அதை விட மட்டமாக, போதுமென்கிற அளவுக்கு ஸௌகர்யம் இருந்தும் இன்னும் வேண்டும் என்று கேட்கிற அர்த்தார்த்தியின் பக்திக்கு பக்தி என்று பேர் கொடுப்பதே தப்பு மாதிரி இருக்கிறதே!' என்று தோன்றலாம்.

ஆனால் ஸாக்ஷாத் பகவான் ஞானத்தை வேண்டுகிற ஜிஜ்ஞாஸுவையும், ஞானத்தை அடைந்தே விட்ட ஞானியையும் சொன்னாற் போலவே இந்த ஆர்த்தன், அர்த்தார்த்தி இரண்டு பேரும்கூடத் தன்னை பூஜிப்பதாகத்தான் சொல் கிறார். அது மட்டுமில்லை. இந்த நாலு தினுஸானவரையும் ***ஸுக்ருதின : ஜனா:'*** அதாவது ஸுக்ருதம் பண்ணினவர்கள் புண்யம் பண்ணினவர்கள் என்று ச்லாகித்துச் சொல்கிறார்.

இரண்டு ச்லோகங்களுக்குப் பிறகு, மறுபடியும் இந்த நாலு வகையான பக்தர்களும் ச்ரேஷ்டமானவர்களே (உதாரமானவர்களே): ***உதாரா: ஸர்வ ஏவைதே*** என்கிறார். ஏன் இப்படிச் சொன்னார்?

ஞானியையும், ஞானத்தைத் தேடுகிறவனையும் மட்டுமில்லாமல், லௌகிக கஷ்டம் தீருவதற்காகவே ப்ரார்த்தனை பண்ணுகிறவனையும், ஓரளவு ஸௌக்யமாயிருந்தும்கூட இன்னும் ஜாஸ்தி ஸௌக்யம் வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறவனையும் கூட ஏன் பகவான் தன் பக்தர்கள் என்று சொல்லிக் கொண்டார்? ஏன் அவர்களை 'ஸுக்ருத்', 'உதாரர்கள்' என்றெல்லாம் ச்லாகித்தார்? என்பது கேள்வி.

## லௌகிக ப்ரார்த்தனைக்கு ஸமாதானம்

லோக வாழ்க்கையில் நமக்கு அநேக கஷ்டங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இத்தனை கஷ்டங்களையும் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாமல், பகவான் விட்ட வழி' என்று நாம் பகவானை பகவானுக்காகவே பக்தி பண்ணிக் கொண்டிருந்து விட்டால் ரொம்ப உசத்திதான். இதற்கு அக்ஷேபணையே இல்லை. ஆனால் நடைமுறையில்,

வாஸ்தவத்தில் நம்மில் யாரால் அப்படி இருக்க முடிகிறது? ஏதோ ஒரு மாயை லோகம் முழுவதையும் பிடித்து ஆட்டுகிறது. ***’மஹா மாயா விச்வம் ப்ரமயஸி’*** என்று ஆசார்யாள் கூடச் சொன்னார். அதிலே நாம் மாட்டிக் கொண்டிருக்கிறோம். லோகம் தான் நிஜம்; நம் தேஹம் தான் நிஜம் என்றே நாம் அத்தனைபேரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம், லோக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதிலே ஒரு தோல்வி, மானபங்கம், வ்யாதி, வக்கை, கடன், கஸ்தி வந்தால் கஷ்டப்படத்தான் செய்கிறோம். இப்படிக் கஷ்டப்படாவிட்டால் உசத்திதான். ஸந்தேஹமேயில்லை. இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்கோ ஒரு நாளாவது நாம் இம்மாதிரிக் கஷ்டப்படாமல், மாயையை மாயை என்று புரிந்துகொண்டு, பட்டுக் கொள்ளாமல் இருக்கத்தான் வேண்டும். இப்போதிலிருந்தே அதற்கான ப்ரயத்னங்களைப் பண்ணிக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் என்றைக்கோ அப்படி நாம் ஆவதும், ஆகாததும் ஒருபக்கம் இருக்கட்டும். இன்றைக்கு, இப்போது நமக்குக் கஷ்டம் இருந்தால் அது கஷ்டமாகத் தெரிகிறதோ, இல்லியோ? முள் குத்தினால் கால் வலிக்கிறதோ இல்லையோ? ஜ்வரம் வந்தால் ‘ஹா ஹா‘ என்று அனத்துகிறோமோ இல்லையோ? வீட்டிலே ஒரு கஷ்டம், ஆஃபீஸில் சண்டை, ஏதோ ஒரு அவமானம் என்றால் உள்ளே அது நம்மைக் கருணகிழங்கு மாதிரி அரித்துப் பிடுங்கிக்கொண்டே இருக்கிறதா, இல்லையா? நம் வீட்டுக்காரர்களுக்கு நாம் செய்ய வேண்டியதை செய்ய வேண்டும், பெண்ணுக்குக் கல்யாணம் பண்ண வேண்டும், பிள்ளைக்குக் காலேஜில் ஸீட் பிடிக்க வேண்டும் என்று இப்படி நம் கடமைக்காக, பொறுப்புக்காக அலைய வேண்டியிருக்கிறதோல்லியோ?

இதில், போகிற இடங்களில் கார்யம் ஜயிக்காமல் ஏமாந்தும் போகிறோமல்லவா? இந்த மாதிரி ஸமயங்களில் என்ன பண்ணுவது? எல்லாம் கர்மா என்று மனஸைத் தேற்றிக் கொண்டு, கீதையில் சொன்ன மாதிரி, நம் கடமையை மட்டும் பண்ணிக் கொண்டு, பலனை நினைக்காமல் லேசாக இருந்து விடலாம் என்றால், அது முடியாமல், உள்ளே அரித்துப் பிடுங்கிக் கொண்டே இருக்கிறதே, இப்போது என்ன பண்ணலாம்? பகவான் என்று ஒருத்தன் இருக்கிறான். அவன் தான் ஸர்வ லோகங்களையும் நிர்வாஹம் பண்ணுகிறான், தர்மம் என்கிற சட்டத்தை (law) வைத்துக் கொண்டு அதன்படி அவன் ஆட்சி பண்ணுகிறான் என்று நாம் நம்புகிறோம்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## மண்டோதரி

### நல்ல மனைவி



மயன் என்ற அரக்கன் பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் புரிந்த அசுரர்களின் குருவான சுக்ராச்சாரியாரின் ஆசியினால் சிற்பக்கலை வல்லுனன் ஆனான். அவன் விந்திய மலைச் சாரலில் ரிஷபிலம் என்ற குகையை ஊடுருவிச் சென்று அதன் மறுபுறத்தில் அற்புதமான நகரம் ஒன்றை அமைத்தான். அங்கு ஹேமை என்ற தேவமாதுவுடன் அவன் கூடி வாழ்ந்த போது அவர்கட்கு துந்துபி, மாயாவி என்ற மகன்களும், மண்டோதரி என்ற மகளும் உண்டானார்கள். மயன் தன் மகளை இராவணனுக்கு மனைவியாக்கினான். சக்தி ஆயுதத்தையும் அளித்தான்.

அரக்கர் குலத் தோன்றலாயினும் மண்டோதரி நற்பண்புகள் மிக்க கற்புக்கரசியாகத் திகழ்ந்தாள். அவளுடைய முதல் மகன் மேகநாதன். இவன் இந்திரனோடு ஒரு முறை போர் புரிந்து வெற்றி கண்டமையால் இந்திரஜித் என அழைக்கப்பட்டான். இவனுக்கு இளையவன் அஷகுமாரன்.

சீதையை தேடிச் சென்ற அனுமன் இலங்கையில் இராவணனின் அரண்மனையில் அரக்க அரசனின் கட்டிலுக்கு அடுத்த கட்டிலில் அணிகலண்களால் அலங்கரிக்கப்பட்டு அயர்ந்திருக்கும் அரக்க அழகியைக் கண்டு அவளே சீதையோ என ஒரு கணம் ஐயுற்றான். மண்டோதரியின் அலங்காரமும், கனவு கண்டு உதடுகள் உறக்கத்தில் பிதற்றுவதையும் கண்டு அவள் சீதையல்லள் என்ற முடிவுக்கு வந்தான்.

இராம இலக்குமணர்களுக்கும், அரக்கர்களுக்கும் போர் நடந்து வரும் போது கும்பகர்ணன் இராமனுடைய அம்புகளினால் வீழ்ந்தான். தன் அருமைத் தம்பியும் வலிமையுள்ளவனுமான கும்ப கர்ணன் வீழ்ந்ததும், இராவணன் தானே

நேரில் போர் செய்யப் புறப்படும் போது மண்டோதரியிடம் விடை பெறலுற்றான். தான் வெற்றியுடன் திரும்பாவிடில் வீர சுவர்க்கம் புகுவதாகச் சூளுரைத்தான். அப்படி மரித்தால் தன் மனைவியைத் தீக்குளிக்குமுன் சீதையைக் கொன்று விடும்படிக் கூறினான். மண்டோதரி அவனை வணங்கி இராமனைச் சரணடைந்து சீதையை அவனிடம் ஒப்புவித்து நாட்டைத் துறந்து இல்லறத்திற்கு அடுத்த நிலையாகிய வானப்பிரஸ்த நிலையை மேற்கொள்ளலாமென மிகவும் பணிவுடன் வேண்டினாள். இராவணனிடம் அவனுடைய பகைவன் முன்னர் பாற்கடலைத் தேவரும், அசுரரும் கடைந்த போது மந்தரமலை என்னும் மத்து அசையாமல் இருக்க ஆமை வடிவெடுத்த திருமாலே என்றும், மேலும் இரணியாக்ஷனைக் கொன்று, பூமியை மீட்ட வராக வடிவினனும் இரணிய கசிபுவை நரசிங்க வடிவில் கொன்று பிரகலாதனைக் காத்தவனும், உலகத்தையும், வானுலகையும் ஈரடிகளால் அளந்து மூன்றாவது அடியால் மகாபலியை பாதாளத்திற்கு அனுப்பிய வாமன வடிவினனும் மற்றும் பரசுராம வடிவாகி அரச குல பரம்பரையினரை வேரறுத்தவனும் ஆகிய நாரயணனும் அவனே என்றும் விளக்கினாள். ஆனால் இராவணனோ தன் பொருட்டு உயிரிழக்கும்படி கோடிக் கணக்கில் அரக்கர்களைப் போருக்கு அனுப்பிய பின் தான் மட்டும் தனியே தவமியற்றச் செல்வது தகாது என்று கூறிப் போருக்குச் சென்றான்.


போரில் மரணம் எய்திய இராவணனைக் கண்டு மண்டோதரி புலம்பும் போது எதிர்த்து வந்தவனைச் சாதாரண மனிதன் என எண்ண வேண்டாம் எனத் தான் எச்சரித்தது வீண் போயிற்றே என அரற்றினாள். கேவலம் ஒரே மனிதன் தண்டகாரணியப் போரில் கரன், தூஷணன் முதலான அரக்கர் தலைவர்களுடன் பதினான்காயிரம் வீரர்களை அழித்திருக்க இயலாது. ஒரு குரங்கு கடலைக் கடக்கவோ, அசோக வனத்தை அழிக்கவோ, அல்லது இலங்கைக்குத் தீயிடவோ இயலாது. குரங்குகளைக் கொண்டே ஒரு மனிதன் கடலின் மீது அணைகட்ட இயலுமோ இவையனைத்தையும் கொண்ட இராவணனின் எதிரி தேவர்களனைவரும் அடிபணியும் நாரயணனே எனத் தீர்மானித்து இராமனைச் சரணடைவது ஒன்றே வழி என வற்புறுத்தியதையும் நினைவு கூர்ந்து புலம்பினாள். குறிப்பாக இராவணன் தன் புலன்களை காமம் முதலிய மாசுகளை நீக்கி, பிரமனையும் ஈசனையும் தவத்தால் வசப்படுத்தியதை நினைத்து அதே இராவணன் தன் புலன்களுக்கு அடங்கி காம வசப்பட்டு இராம பாணத்தினால் வீழ்ந்த சோக நிகழ்ச்சியையும் நினைந்து நெஞ்சு வெந்து புலம்பி, இராவணனுடைய சிதையில் உடன் கட்டை ஏறினாள். கற்பையே நோன்பாக உடைய இந்த அரக்கர் குலச் செல்விக்கும் ஈமக் கடன்களைக் குறைவின்றிச் செய்யும்படி விபீடணனுக்கு இராமன் பணித்ததில் வியப்பேது?

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## இந்து சமய கலை, கலாசார விழா

*05.06.2019 முதல் 10.06.2019 வரை*



**நாராயணாய நலினாயத லோசனாய**
**நாமாவசேஷித மஹா பலி வைபவாய**
**நானாசராசரவிதாயக ஜன்மதேச**
**நாபீபுடாய புருஷாய நம : பரஸ்மைƒ**

இந்த சதஸின் அங்கமாக இன்றைக்கு வைணவ ஆகமங்களில் பாஞ்சராத்ரம் மற்றும் வைகானசம் ஆகமங்களில் சாஸ்திரத்தை முதல் நிலையில் கற்றுக் கொள்வதற்கு சொன்னார்கள் - அதாவது இரண்டு விதமான நிலைகள் இருக்கின்றன. ஒன்று உற்சாகம் பக்தியின் மூலமாக இறைவனுக்கு நாம் செய்ய வேண்டியதை, நிறைய செய்ய வேண்டும் என்று நினைக்கக் கூடிய பக்தர்கள். தெரிந்த முறையிலே இருந்து கவனிக்க வேண்டிய நிலையிலே ஊர்கள், செய்யக்கூடிய பக்தர்களுக்கு வழிகாட்டுதல் என்றால் இவர்கள் தற்போது சொன்ன விஷயங்கள் எல்லாவற்றையும் மக்களிடையே- கோபூஜை நடைபெற்று வருகிறது. அவ்வப்போது நடை பெற்று வருகிறது. தினசரி அங்கமாக கோபூஜை நடை பெற வேண்டும் என்ற விஷயம் மக்களுக்கு தெரியப் படுத்தவேண்டும் தெரிய வேண்டும் பல கிராமங்களிலே இந்த கோபூஜை செய்ய வாய்ப்பு ஏற்படும் ப்ரத்யக்ஷமாக பெரிய கோயில்களில் உற்சவங்கள் நடைபெறுகின்றன. அது சாஸ்திரப்படி நடைபெறுகின்றன. மக்களின் உற்சாகப்படியும் நடைபெறுகின்றன.

இது போன்ற அடிப்படையான விஷயங்கள் அலங்காரம், புஷ்பங்கள், பூஜைகளிப் பற்றி, மாலைகளைப் பற்றி, பொது ஜனங்களுடைய ஸ்ரத்தை, பொது ஜனங்களின் சௌகரியங்கள், இதையும் சாஸ்திரக் கருத்துக்களையும் ஒரு சேர பார்க்கக் கூடிய நிலை வந்தால், சாஸ்திர முறையிலே பல கோவில்களுடைய பூஜையை முடிக்கவும்

அபிவிருத்தி ஆவதற்கு வாய்ப்புகள் நிறைய ஏற்படும் அதாவது ஒரு பக்கம் திடீரென்று நடைபெறுவதற்கு நிறைய விஷயம் இருக்கும் மற்றபடி இந்த சாஸ்திர விஷயங்களில், விஷயம் வாரியாக அதற்குரிய விளக்கங்களோடு இந்த வாக்கியத்தை எந்த விதமாக பார்க்க வேண்டும், என்று விளக்கத்துடன் நிறைய பதிப்புகள் பிரகாசம் இருந்தால், ஸ்ரத்தை அக்கறையானது வளர்ந்து கொண்டு இருக்கிறது. அந்த நேரத்திலே, சரியான வழிகாட்டின் மூலம், நித்ய பூஜைகள் முக்கியமாக நடைபெற வேண்டும். அதாவது, ஆயிரம் கோவில்கள் இருகின்றன என்றால், தினமும் ஆயிரம் கோவில்களில் நித்ய பூஜை அவசியம் நடைபெற வேண்டும். உற்சவம் நடைபெறுவது, மற்ற விழாக்கள் நடைபெறுவது தினசரி நடைபெற வேண்டிய பாராட்டுகின்ற பூஜை என்றால் ஜனங்களுடைய நலனுக்காக நடைபெறக் கூடிய பூஜைகள், அதையெல்லாம் சிறப்பாக நடத்துவதற்கு, இந்த ஆகம சாஸ்திர விளக்கங்கள், பத்திரிக்கை வாயிலாகவோ, தர்மகர்த்தாக்கள், பொது மக்கள், முக்யஸ்த்தர்கள், அனைவருக்கும் அளித்து, ஒவ்வொன்றாக ஆரம்பிக்கணும் நித்ய பூஜை முக்கியம் எதற்காக? கோபூஜை முக்கியம் என்பது எதற்காக? பிரசாத விநியோகம், அதனுடைய சிறப்புகள், பிரமோற்சவம் அதன் சிறப்புகள். சிலது கிராமத்தில் செய்ய முடியும். சிலது நகரத்தில் செய்ய முடியும். சில பூஜைகளை ஒரு மணியில் செய்ய முடியுமா? இந்த மணிக்குள் செய்ய முடியுமா என்றெல்லாம் பார்க்க வேண்டும்.

அந்த சாஸ்திர கருத்துகளை, மக்கள் பார்வைக்கு கொண்டு வருவதற்காக, இந்த நூல்கள் வெளிவர வேண்டும். சாஸ்திரம் என்பதை நாம் சொல்கிறோம். சாஸ்திரம் என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். இது போன்ற பக்தர்களுடன் சேர்ந்து, இது போன்ற ஸதஸில் நாம் தெரிந்து கொள்கிறோம். இது போன்று மேன்மேலும் நடைபெற வேண்டும். இதன் மூலம் பலர் நல்ல காரியத்திலே ஈடுபட முடியும். (இவர் பக்தி பிரசாரம் பண்ணிண்டு இருக்கார். இவர் நித்ய கர்மா பிரசாரம் பண்ணிண்டு இருக்கார். இந்துக்களுக்கு உரிய அடையாளங்கள் என்ன? உடை அடையாளம் என்ன, எப்படி கோவிலுக்கு போக வேண்டும் - அது மாதிரியான புஸ்தகங்களை போடுவது, பஞ்சகவ்யத்திலிருந்து ஆரம்பித்து பிரம்மயஞ்யம் சின்ன சின்ன புத்தகங்கள் வெளியிடுதல்) இப்போது கந்த சஷ்டியை ஒட்டி சுப்பிரமணிய புஜங்கம், அந்தப் பிரசாரம் நடைபெறுகிறது.

லௌகீகர்கள் மத்தியிலே தினசரி கொஞ்ச நேரமாவது பக்தி வழியிலே ஈடுபடுவது எப்படி என்பதற்காக பிரசாரத்தினை செய்து வருகிறார்கள். கோவிலுக்கு வருபவர்கள் நித்ய கர்ம அனுஷ்டானகளை எப்படி செய்ய வேண்டும். இம்மாதிரி பல விஷயங்களை சொல்வதற்காக பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கார். இந்த நிகழ்ச்சிக்கு இரண்டு பேர் வெளியிலே இருந்து வந்து இருக்கார்கள். (இவர்) ஒருத்தர் அஸ்ஸாமிலே

இருந்து வந்து இருக்கார். இவர் பெரிய டாக்டர். நம்ம கண் ஆஸ்பத்திரியில், அஸ்ஸாமில் காமகோட்டம் என்ற இடத்திலே, பழைய ஊர் பிரம்மபுத்ரா. அங்கே நம்ம மடத்தின் கோவில் பெருமாள் கோவில், பூர்வ திருப்பதி என்பதாக, நல்ல அழாகான கோவில், நரசிம்மராவ் அவர்கள் காலத்தில், ஹிதேஷ்வர் சைக்கியா இடம் எல்லாம் கொடுத்து உதவினார்கள். அழாகான கோவில். முன்னுக்கு வந்துண்டு இருக்கு.. வருஷா வருஷம்- ஒரு மண்டபம், ஒரு சந்நிதி, அப்படியெல்லாம் வந்து - ஜனவரி ஒன்னாம் தேதின்னா அங்கே பதினைந்தாயிரம் பேர் வந்து சேவிப்பா. அந்த ஊரில் கோவில் என்பதே இந்த பெருமாள் கோவில்தான். அவர்கள் அங்கே சுப்ரபாதம் நடத்தி, திருமஞ்சனம் நடத்தி, விக்ரஹங்கள் எல்லாம் வைத்து, பூஜை எல்லாம் பண்ணி, துலாபாரம் நடக்கிறது. லட்டு பிரசாதம் கிடைக்கிறது. கல்யாணம் கட்டா நடக்கிறது. எல்லாம் நன்றாக நடக்கிறது. கிழக்கிற்கான திருப்பதியாக, மிக விமரிசையாக நடந்து கொண்டு வருகிறது. அங்கு சங்கர நேத்ராலயா என்ற கண் ஆஸ்பத்திரி இருக்கிறது. அதிலே பிராதனமாக இருக்கார்.

இன்னொருத்தர் வந்திருக்கார். அவர் அக்னி உபாசகர். ஈரான், ஈராக்கில அவர்களுடைய பழைய கோவில்கள் எல்லாம் இருக்கு. அவர்கள் பம்பாயில் அக்னி கோவில் வைத்திருக்கிறார்கள். (அவர்கள் ஜ்வாலயயே கோவிலாக வைத்து, Fire Temple என்பதாக, அக்னி உபாசகர். பின்பு பேசினார்கள். அவர் Fire Temple பற்றி கடினமாக நியமங்கள் உள்ளன. அவர் பின் மந்திரங்கள் சொல்ல மந்திரங்கள் சமஸ்க்ருதம் அடிப்படையானது.

## ஸனாதன தர்மப்புதிர்கள் டிசம்பர் வினாக்கள்

1. ஏழுமலையானுக்குத் தினப்ப்ரஸாதம் எது?
2. கோபுரத்தின் நிழல் தலைகீழாக விழும் இடம்
3. குருடராயினும் சிவனை போற்றிய சிவனடியார்
4. திருக்கச்சி மயானம் எங்குள்ளது?
5. திருவேளுக்கை எங்குள்ளது?
6. தமிழகத்தின் தொன்மையான ஆறு
7. மூன்று வைஷ்ணவ திவ்ய தேசம் அடங்கிய கோவில்
8. திருமறைகாட்டில் உள்ள விடங்கர்
9. அதிகாயனின் தாயின் பெயர்
10. சிசுபாலவதம் இயற்றிய கவி

# ஸ்யாமளா தண்டகம் பலஸ்ருதி

# स्यामळा दण्डकम् फ्लश्रुति

तस्य लीलासरो वारिधि;तस्य केलीवनम् नन्दनम् तस्य भद्रासनम्भूतलम्

तस्य गीर्देवता किन्करी तस्य चाग्याकरी स्वयम् ।।

u ì ¯ ½»õ é ÷µõ Áõ› v u ì ¯ ÷P½Á Ú® |¢uÁ Ú® u ì ¯ £zµõ é Ú®

§u»® u ì ¯ Rº÷uÁuõ Q [ PŸ u ì ¯ \õg ¯õPŸ ì Á ¯®.

*கடல் அவனுக்குக் குளமாம், விண்ணுலகில் இருக்கும் நந்தவனம் விளையாட்டு பூங்கா பூதலமே அவனுக்கு அரியணையாகும், நாமகள்அவனுக்கு வேலைக்காரி, அலைமகளும் அவனுக்கு பணிப்பெண் ஆவாள்.*

सरवतीर्थात्मिके सर्व मन्त्रार्थ्मिके सर्व यन्त्राथ्मिके सर्व तन्त्रात्मिके

सर्व पीटात्मिके सर्व तत्वात्मिके सर्व शक्त्यात्मिके सव योगात्मिके

सर्व नादात्मिके सर्व शष्दात्मिके सर्व वर्णात्मिके सर्व विह्द्यात्मिके

सर्व विश्वात्मिके सर्वगे हे जगन् मात्रुके पाहि माम् पाहि माम् पाहि माम्

देवि तुभ्यम नमो देवि तुभ्यम् नमो देवि तुभ्यम् नमः ।।

é ºÁ wºu E ¸÷Á é ºÁ ©¢zµ E ¸÷Á é ºÁ ¯¢zµ E ¸÷Á é ºÁ

u¢z r a E ¸÷Á, é ºÁ ¥h ¹ ¤ o \P» uzÁ \Uv ÷¯õP ¹ ¤ o

*சகல நாத வடிவானவளே சகல எழுத்து வடிவானவளே சகல ஒலி வடிவானவளே சகல வித்யை வடிவானவளே சகல லோக மாயிருப்பவளே எங்கும் நிறைந்தவளே லோக மாதா என்னைக் காப்பாற்று என்னைக் காப்பாற்று. தேவி உனக்கு நமஸ்காரங்கள்.*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 8

பி. ஆர். கண்ணன்



## ஸுதர்சனனுக்கு தேவியின் அனுக்ரகம்

காசியில் பல ராஜாக்கள் 63 அக்ஷௌஹிணி சைன்யத்துடன் குழுமியிருந்தனர். யுதாஜித் அங்கு வந்து ஸுதர்சனனைக் கொல்வேன் என உறுதி பூண்டிருந்தான். மற்ற ராஜாக்கள் ஸுதர்சனனிடம் உயிரைக் காபாற்றிக் கொள்ள திரும்பிப் போகுமாறு எச்சரித்தனர். அப்போது ஸுதர்சனன் சொன்ன பதில் யாரையுமே திகைப்பின் எல்லைக்கே கொண்டு சென்றுவிடும். அவன் சொன்னான்: 'தேவியின் கிருபையினால் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரே சக்தியைப் பெறுகின்றனர். எனக்கென்ன கவலை? தேவியின் ஆக்ஞைப்படிதான் நான் காசிக்கு வந்துள்ளேன். வெற்றி, தோல்வியில் எனக்கு கொஞ்சங்கூட லஜ்ஜையில்லை. நான் பகவதியின் அடிமையாக இருப்பதனால், வெட்கப்படவேண்டியது பகவதியே' என்று. மறுநாள் சுயம்வரத்திற்கு ராஜசபைக்கு வர மறுத்தாள் சசிகலா. ஸுதர்சனனுக்கு விவாகம் செய்துவைக்குமாறு பிதாவிடம் சொன்னாள். ராஜசபையில் சுயம்வரத்தை ஒருநாள் ஒத்தி வைத்ததாகக் கூறினான் ஸுபாஹு. சசிகலா அன்றைய தினம் ஸாயங்காலமே அரண்மனையில் அதி ரகஸ்யமாக தன் விவாகத்தை ஸுதர்சனனுடன் நடத்தி வைக்குமாறு வற்புறுத்தினாள். வேறு வழியில்லாத ஸுபாஹு அவ்வாறே விவாகத்தை நடத்தினான். மறு நாள் காலை ராஜஸபையில் விவாகம் நடந்து முடிந்ததைத் தெரிவித்ததும், பெரிய கோலாகலம் நிகழ்ந்தது. யுதாஜித் எல்லா ராஜாக்களுடன் சைன்யங்களுடன் வெளியில் முற்றுகையிட்டான். ஸுதர்சனன் வெளியில் வரும்போது அவனைக் கொன்றுவிடுவது என்று தீர்மானமாக இருந்தான். ஆறு நாட்கள் கழித்து, 'க்லீம்' அக்ஷர ஜபத்துடன், ஸுதர்சனன், சசிகலா, ஸுபாஹு, சைன்யத்துடன் அரண்மனைக்கு வெளியில் வந்தவுடன், கடும் யுத்தம் தொடங்கியது. அப்போது திடீரென தேவியானவள் சிம்மவாகனத்தில், மூர்த்தீகரித்த தன் சக்திகளுடன், ஆயுதங்களுடன் அங்கு தோன்றி, யுத்தம் செய்தாள். யுதாஜித், சத்ருஜித், இன்னும் பலரையும் மரணத்திற்கு இரையாக்கினாள். ஸுபாஹு தேவியை ஸ்தோத்திரம் செய்கையில், 'தற்செயலாக ஸுதர்சனனின் ஸத்ஸங்கம் எனக்குக் கிட்டியது. ஸத்ஸங்கம் எதைத்தான் வழங்காது? தேவியின் தரிசனத்தையே எனக்குப் பெற்றுத் தந்துள்ளதே.' என்று போற்றி, தேவி வரம் கேட்குமாறு சொன்னபோது, காசியில் நிரந்தரமாக

துர்காதேவி என்கிற பெயரில் இருந்து அருளவேண்டும் என்று பிரார்த்தித்தான். தேவியும் அவ்வாறே அருளினாள். ஸுதர்சனனை உடனே அயோத்திக்குச் சென்று ராஜ்யபாரத்தை ஏற்குமாறு ஆக்ஞாபித்தாள். தேவியின் அந்தர்தானத்திற்குப்பிறகு, ஸுதர்சனன் திகைத்திருந்த மற்ற ராஜாக்களிடம் தேவியின் மாகாத்மியத்தை எடுத்துச் சொன்னான். அயோத்தி திரும்பி முதலில் சிற்றன்னை லீலாவதியிடம் வேதாந்தம் பேசி, கர்மபல அனுபவம் தவிர்க்கமுடியாதது என்று சொல்லி, சமாதானப்படுத்தினான். ராமராஜ்யம்போல் தர்மராஜ்யம் நடத்தினான். அயோத்தியிலும், காசியிலும் தேவி ஆலயங்களும், தேவி ஆராதனைகளும் வளர்ந்தன. காசியில் இன்றும் பிரசித்தமான துர்காதேவி ஆலயம் உள்ளது. அங்கு ஸுதர்சன சரித்திரம் தேவி பாகவதத்தின் அடிப்படையில் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளதை பார்க்க முடிகிறது.

## தேவி யக்ஞம் :

வியாஸ பகவான் ஜனமேஜயனிடம் பரீக்ஷித்தின் ஸத்கதிக்காக தேவி யக்ஞம் செய்வதன் அவசியத்தை திரும்பவும் வலியுறுத்துகையில், மானஸ யக்ஞம் மிக ஸ்ரேஷ்டம், ஜீவன்முக்தராகவே ஆகலாம் என்று சொல்லி முதல் த்ரவிய யக்ஞம் விஷ்ணுவினால் வைகுண்டத்தில் செய்யப்பட்டதென்றார். அவர் பிரம்மா, சிவன், தேவர்களை அழைத்து, 27 ரித்விக்குகள் வைத்துக்கொண்டு விஸ்தாரமாகச்செய்தார். தேவியின் அனுக்ரகம் அசரீரியாகக் கிட்டியது. இதேபோல் பின்னர் சிவன், பிரம்மா, தேவர்கள் ஆகியோரும் தேவி யக்ஞம் செய்து பயனடைந்தனர்.

## நவராத்திரி வ்ரதம் :

வருஷத்தில் நான்கு நவராத்திரிகள் கொண்டாடவேண்டும். ருதுக்கள் மாறுகையில், யமனின் கோரைப்பற்கள்போல் ஜனங்களுக்கு சிரமத்தைக் கொடுக்கும். அப்போது தேவியை அடைக்கலம் புகுந்தால் சௌக்கியம் கிடைக்கும் என்பதற்காகவே நான்கு நவராத்திரிகளை வைத்துள்ளார்கள். சைத்ர (வஸந்த), ஆஷாட, சரத் (ஆஸ்வின), மாக (மாசி) மாதங்களில் வரும். சைத்ரமும் ஆஸ்வினமும் மிக முக்கியம்; அதிலும் ஆஸ்வினம் இன்னும் ஸ்ரேஷ்டம் என்பதால் பிரசித்தமாகக் கொண்டாடுகிறோம். அழகான மண்டபம் எழுப்பி, அலங்கரித்து, தேவியை பிரதிமை அல்லது யந்திரத்தில் ஆவாகனம் செய்து, அதேபோல் கலசத்திலும் வரவழைத்து, 9 அல்லது 5, 3, அல்லது ஒரு பிராம்மணரையாவது வரித்து தேவி பாகவத பாராயணம், விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம், துர்கா ஸப்தசதி பாராயணம், தேவி பாகவத கதை, த்ரிகால பூஜை, ஹோமம் 9 நாட்களும் செய்யவேண்டும். ஹோமம் சண்டி ஹோமமோ, காயத்திரி மந்திரத்தாலோ செய்யலாம். கதை கேட்பவருக்கு வசதியாக இடம் இருக்கவேண்டும். உபவாசம் முக்கியம். தினமும் குமாரி, ஸுவாஸினி, வடு பூஜைகள் முக்கியம். குமாரி 2 வயதிலிருந்து 10 வயதிற்குள் இருக்கவேண்டும். முதல் நாள் 2 வயது குமாரி, 2ம்

*நாள் 3 வயது, இவ்வாறாக 9ம் நாள் 10 வயது குமாரி என்று தினமும் செய்தால் மிக நன்று. முடியாவிட்டால் எப்படி கிடைக்கிறார்களோ, அப்படியே பூஜை செய்யவும். ஒவ்வொரு வயது குமாரிக்கும் ஒரு விசேஷப் பெயர், ஸ்தோத்திரம், பலன் எல்லாம் விஸ்தாரமாகச் சொல்கிறார் வியாஸர். 2 வயது பெண்ணின் பெயர் குமாரிகா-பூஜையினால் துக்கம், ஏழ்மை, சத்ருநாசம் ஏற்படும். 3 வயது குமாரி-த்ரிமூர்த்தி- தர்மம், அர்த்தம், காமம், தனம், தானியம் கிடைக்கும். 4 வயது-கல்யாணி- வித்யை, ஜயம், ராஜ்யம், சுகம் லாபம். 5 வயது- ரோஹிணி- பூர்வஜன்மகர்மநாசம். 6 வயது- காளிகை- சத்ருநாசம். 7வயது- சண்டிகை- தனப்ராப்தி. 8 வயது- சாம்பவி- ஆகர்ஷணம். 9 வயது- துர்கா- உக்ரகர்மபூர்த்தி. 10 வயது- ஸுபத்ரா- ஸர்வ மங்களங்களும் உண்டாகும். ஸுபத்ரா ஸ்தோத்திரம்- ஸுபத்ராணி ச பக்தாநாம் குருதே பூஜிதா ஸதா ந அபுத்ரநா ஸ்ரீம் தேவீம் ஸுபத்ராம் பூஜயாம்யஹம் நந எல்லா நாட்களிலும் பூஜை செய்ய முடியாவிட்டால், ஸப்தமி, அஷ்டமி, நவமி ஆகிய மூன்று நாட்களிலாவது, அதுவும் முடியாவிட்டால் அஷ்டமி திதியில் மட்டுமாவது பூஜை செய்யவேண்டும். அஷ்டமி யன்று தக்ஷயக்ஞத்தை நாசம் செய்த பத்திரகாளி ஆவிர்பவித்த திதி. ஆகையால் விசேஷம். நவராத்திரி கொண்டாட்டத்தில் வசதிக்குத்தகுந்த செலவு செய்தல் நலம்; கருமித்தனம் கூடாது. இப்போது வைபவத்துடன் இருப்பவர்கள் பூர்வஜன்மாவில் நவராத்திரி பூஜை விசேஷமாக செய்தவர்கள், தேவியின் உபாஸனையை பலவிதங்களிலும் நன்றாக செய்தவர்கள் என்று தெரிகிறது.*

**வணிகன் கதை**

*நவராத்திரி வ்ரதத்தினால் விசேஷ நலன் பெற்றவர்களில் சுசீலன் என்ற வணிகனின் கதை மிக இனியது. சுசீலன் பரம ஏழையாக இருந்தான். நிறைய குழந்தைகள். தர்மம் தவறாதவன்; சீலம் நிரம்பியவன். வசதியில்லாததால் புத்திரனை ஒரு பிராம்மணனிடம் விரட்டினான்; புத்திரி 10 வயது தாண்டி விவாகோசித வயதில் இருந்தாள். தாங்கமுடியாத தன் கஷ்டத்தை ஒரு பிராம்மணனிடம் சொல்லி, பரிகாரம் கேட்டான். அந்த அந்தணன் சொன்னார்: 'ஸ்ரீராமரே நவராத்திரி வ்ரதத்தை அனுஷ்டித்துத்தான் ராவணனை வதம் செய்யும் சக்தி பெற்றார். நீயும் வரும் சரத்கால நவராத்திரியில் வேத பாராயணம், ஜபம், ஹோமம், பூஜை, பிராம்மணபோஜனம் எல்லாம் செய்' என்றார். 'ஹ்ரீம்' என்ற பீஜாக்ஷர உபதேசத்தையும் செய்தார். சுசீலனும் அவ்வாறே பரம ஏழையாக இருந்துங்கூட நவராத்திரியை விதானப்படி செய்தான். ஓரிரண்டு வருஷங்கள் அல்ல, 9 வருஷங்கள் விடாமல் செய்தான், அதுவும் மனத்தளர்வின்றி, உற்சாகத்துடன். 9 வது வருஷம் அஷ்டமியன்று நடுநிசியில் தேவி தரிசனம் தந்து பரம அனுக்ரகம் செய்தாள். ஏழ்மையிலிருந்து பரம சௌபாக்கியத்திற்கு மாறியது சுசீலன் வாழ்க்கை.*

'ஹ்ரீம்' என்ற பீஜாக்ஷரம் தேவியின் எல்லா பீஜாக்ஷரங்களிலும் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. மாயா பீஜம், புவனேஸ்வரி பீஜம் என்றெல்லாம் போற்றப்படுகிறது. 'ஹ்ரீம்' என்பது: 'ஹ' ஸ்தூல சரீரம், 'ர' ஸூக்ஷ்ம சரீரம், 'ஈ' காரண சரீரம், பிந்து துரீயம் என்று ஸ்ருஷ்டியில் ஜீவனின் எல்லா நிலையிலும் கைகொடுக்கக்கூடிய மந்திரமாகத் திகழ்கிறது. ஞானப்பிரதானமானது. துரீய நிலையாகிய மோக்ஷத்தையும் தரவல்லது.

**ஸ்ரீமத் ராமாயணம்**

எல்லா புராணங்களிலும் ராமாயணம் உரைக்கப்படுகிறது. இங்கும் அதனை சுருக்கமாகப் பார்க்கிறோம். ராமர் வனவாசத்தின்போது, ஸீதையைப் பிரிந்து, ஜடாயு ஸம்ஸ்காரம், ஸுக்ரீவஸக்யம் ஆனபிறகு, மழைக்காலத்தில் லக்ஷ்மணனுடன் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தார். ராமரின் துக்கம் தாங்கமுடியாமல் இருந்தது. மனுவம்சத்தில் யாரும் தன்னைப்போல் துக்கம் அனுபவிக்கவில்லை என்று புலம்பினார். லக்ஷ்மணன் சமாதானமாகப் பேசினார்: 'மனிதர்கள் சேருவதும் பிரிவதும் தெய்வாதீனம். இதில் சோகப்படுவது தகாது. ஆபத்திலும் ஸம்பத்திலும் ஒரே மனோதைரியத்துடன் இருப்பவர் தான் தீரர்கள்' என்று, பல கதைகளைச் சொல்லி, தைரியமூட்டினார். அப்போது நாரதர் ஸாமகானத்துடன் வந்து, சொன்னார்: 'ஸீதை முன் ஜன்மத்தில் தபஸ்வினியாக இருந்து, ராவணனை சபித்து அடுத்த ஜன்மத்தில் அயோனிஜையாக வந்து ராவணனை அழிப்பேன் என்று சொல்லியிருக்கிறாள். தேவேந்திரன் காமதேனுவின் பால் கொடுத்தனுப்பி, அதனால் ஸீதை இப்போது பசி தாகமற்று இருக்கிறாள். நீ வரும் சரத் நவராத்திரியில் வ்ரதம் அனுஷ்டித்து, தேவியை உபாஸி. பூர்வத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன், இந்திரன், வஸிஷ்டர், விச்வாமித்திரர், ப்ருகு, கச்யபர், ப்ருஹஸ்பதி எல்லோரும் அனுஷ்டித்து அனுக்ரகம் பெற்றனர்.' என்று சொன்னார். ராமரும், நாரதரையே குருவாகக்கொண்டு ஆஸ்வின நவராத்திரியில் உபவாசம், வ்ரதம், பூஜை, ஹோமம், தேவி பாகவத பாராயணம், கதை எல்லாம் நன்றாகச் செய்தார். அஷ்டமி நடுநிசியில் தேவி தரிசனம் தந்து அனுக்ரகித்தாள்: 'ராம ராம மஹாபாஹோ துஷ்டாஸ்ம்யத்ய வ்ரதேந தே' என்று சொல்லி, 'நீ நாராயணாம்சம். எல்லா அவதாரங்களிலும்- மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன, பரசுராம- அவதாரங்களில் நான் சக்தியை அருளி ஜயமடைந்தாய். இப்போதும் என் சக்தியுடன், வானரசேனை உனக்கு உதவும். ராவணவதம் வஸந்த நவராத்திரி பூஜைக்குப்பிறகு நீ நிகழ்த்து. 11000 வருஷம் ராமராஜ்யம் நடக்கும்' என்று அருளினாள்.

(வளரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## விஷ்ணு புராணம்

C. பேணச்சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத்தாம் புகுவார் புக்குப் போதுவார்
ஆணொப்பார் இவன் நேரில்லே காண்-திரு
வோணத்தான் உலகாளு மென்பார்களே.

49. **தேவகி :** ''நீர் ஸாக்ஷாத் பரமபுருஷன் என்றும் ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவன் என்றும் அறியப்படுபவன். தனிப்பட்ட இறையனுபவமாய் ஆனந்த வடிவம். அறிய வேண்டியவை அனைத்தையும் பார்ப்பவன். அப்படிப்பட்ட நீயே ப்ரக்கருதியைப் படைத்து முக்குணங்களோடு கூடிய ஆத்மாக்களால் அதன் அதனுள் புகுந்து, புகுந்தவண்ணமே தோன்றுகிறாய்.''

50. அகில உலக நாயகா ! நீ இவ்வுலகெங்கும் நிறைந்து ரக்ஷிப்பவன் எங்கள் வீட்டில் வந்து அவதரித்திருக்கிறாய். பல அசுர கூட்டமாம் யானைகளை அழிப்பதற்காகவே அவதரிக்கிறாய் என்பது அறிவேன்.

51. இப்படி அப்படி என்று சொல்லமுடியாத அக்குழந்தையைப் பார்த்து, பரமபுருஷனான (பரம புருஷ இலக்கணங்களோடு கூடிய) அவனை, கம்ஸனிடமிருந்து பயந்தவனாய் அணைத்துக் கொண்டாள்.

52. 'யாருக்கும் புலப்படாதது, மிகவும் தொன்மையானது பிரம்மம், ஜ்யோதி (ஒளிவடிவானது) குணங்களைக் கடந்தது. மாறுதல் அடையாதது, சுத்த ஸத்வமானது, இப்படிப்பட்டவன் என்று விசேஷிக்க முடியாதது அப்படிப்பட்ட ஸாக்ஷரத் விஷ்ணு. அத்யாத்ம ஒளி'' என்று புகழ்ந்தாள்.

53. மரணம் எனும் பாம்பிற்குப் பயந்து ஓடுகின்ற மனித இனம் திடீரென்று, உன் திருவடித் தாமரையைச் சரணடைந்து பயம் அடையாமல் சுகமாக உறங்குகிறார்கள். அப்படிப்பட்ட நீ கொடுமையான கம்ஸனிடமிருந்து எங்களைக் காப்பாற்று. உன்னுடைய இந்த உருவம், பௌருஷம் வணங்குவதற்குரியது என்பது நிதரிசனம். என்னைப் போன்றவர்கள் உன் கருணையால் காப்பாற்றப்பட வேண்டிய விருப்பமான செயலுக்குட்பட்டவர்கள்.

54. எம்பெருமானே! உமது அவதாரத்தை இந்த கம்ஸன் அறியக்கூடாது. ஹே! மதுஸூதனா! உம்பொருட்டு அடியேன் கம்ஸனிடமிருந்து துணிவில்லாதவளாய் (காப்பாற்ற வழி தெரியாதவளாய்) இருக்கிறேன். எனவே உலகின் உயிரே! இந்த உருவத்தின் சங்கு, சக்கரம், கதை, தாமரை, திருவகலத்தில் லக்ஷ்மி இவைகளை மறைத்துக்கொள்.

55. **பகவான் பேசினான்** அம்மா! தாங்கள் முதற்பிறப்பில் ஸ்வயம்பூ மனுவின் மகளான ப்ரச்னி என்பவளாய் இருந்தீர். இந்த வஸுதேவர் ஸுதபா என்ற ப்ரஜாபதியாக இருந்தார்.

56. நீங்கள் பிரம்மாவினால் ஆணையிடப்பட்டவர்களாய் புத்ர ஸந்தானம் வேண்டி புலன்களை அடக்கி கொடிய தபம் செய்தீர்கள்.

57. மழை, வெயில், காற்று, பனி, கோடை ஆகிய கால இயல்புகளை பொறுத்துக் கொண்டு மூச்சையடக்கி, மனம், அழுக்கு இவைகளைப் போக்கி

58. பழுத்து உதிர்ந்த இலை, காற்று ஆகியவைகளையே ஆஹாரமாகக் கொண்டு ஒரு மனதுடன் என்னிடம் பக்தி உள்ளவர்களாய், என்னை ஆராதித்தீர்கள்.

59. இப்படி நீங்கள் என்னைக் குறித்து தவம், தீவிரமாக, யாராலும் அனுஷ்டிக்க முடியாத தவம் பன்னிரண்டாயிரம் வருடங்கள் என் நினைவாகவே செய்தீர்கள்.

60. அப்பொழுது நாம் இந்த ஸ்வரூபத்துடன் ‘‘குற்றமற்றவளே! சிரத்தை பக்தி, தவம் இவைகளால் மகிழ்ந்தேன்’’.

61. வரமளிப்பவனாக உங்கள் விருப்பம் நிறைவேற வரம் கேளுங்கள் என நீங்கள் என்னைப் போல மகன் வேண்டும் என்றீர்கள்.

62. என்னைப் போல் ஒருவன், குணம், ஔதார்யம் நிறைந்தவனை காணாமல் நாமே ப்ரச்னிகர்ப்பன் என்ற பெயருடன் மகனாய்ப் பிறந்தோம்.

63. மீண்டும் நான் அதிதியினிடம் கஸ்யபர் மகனாக உபேந்த்ரன் என்ற பெயரோடு அவதரித்து குள்ளமாக இருந்ததனால் வாமனன் என்று வழங்கப்பட்டேன்.

64. மூன்றாவதாக இப்போது நான் உங்களுக்கு ஸேவை கொடுத்த ஸாக்ஷாத் மகனாகப் பிறந்திருக்கிறேன். இது ஸத்யமாக என்னால் சொல்லப்பட்டது.

65. நான் என்னுடைய உண்மை உருவை உங்களுக்குக் காட்டியது உங்களின் முற்பிறவிகளை நினைவு கூறவே வேறு இல்லை. என் பிறவியின் பிறப்பு ரகசியம் மனித உருவாய் உருவாகிறது.

66. இப்படிச் சொல்லிவிட்டு பகவான் தன் மாயையால், பெற்றோர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ப்ரக்ருதிக்கு உட்பட்ட குழவியாய் மாறினார்.

67. பின்னர் வஸுதேவர் பகவானால் தூண்டடப்பட்டவராய் குழந்தையை கர்ப்பக்ரஹத்தினின்றும் (பிரசவ அறை) எடுத்துக்கொண்டு வெளியேறும் ஸமயம் பகவானின் யோகமாயையானவன் யசோதை மகளாய் ஆயர் பாடியில் நந்தன் மகளாய் (நந்தகோகுலம் மகிழ அவதரித்தாள்.

68. அந்த யோக மாயையால் வாயிலில் நின்றவர்கள், நகரமக்கள் அனைவரும் மயக்கம் அடைந்தனர். வாயிற் கதவுகள், யாராலும் திறக்க முடியாத பெரிய தாழ்ப்பாள்கள் எல்லாம் தகர்ந்தன.

69. வசுதேவர் குழவியை எடுத்து வந்தவுடன் மீண்டும் அவை இருள் ஆதவனால் அகல்வது (அகன்றனர்) போல ஆயின. மழை இடியுடன் பெய்தது. ஆதிசேஷன் தன் படத்தால் குடை பிடிப்பது போல் சென்றார்.

70. பெருமழையால் யமுனைநதி நிமிர் நீருடன், வேகமான அலைகளுடன் பயத்தை உண்டாக்குபவளாய் இருந்தும் எம்பெருமானை எடுத்துச் சென்ற வசுதேவருக்கு வழி அமைத்துக கொடுத்தாள்.

71. யசோதை தான் பெற்றது என்ன குழந்தை என்று அறியா முன்னம் வசுதேவர் எம்பெருமானை அவள் பக்கத்தில் வைத்துவிட்டு யோகமாயையோடு மதுரா திரும்பினார்.

72. குழந்தை அழ, குழந்தை பிறந்துவிட்டது என்று உணர்ந்த கம்ஸன், அக்குழந்தையின் இருகால்களையும் பற்றி, தங்கையின் மகள் என்றும் பாராமல் தன்னலத்தால் மறைக்கப்பட்ட நிலையில் பாறையில் அறைய முற்பட்டான்.

73. யோகமாயை அந்த கம்ஸன் கையினின்றும் உடனே வெளிக்கிளம்பி விண்ணையடைந்து, விஷ்ணுவின் தங்கையாய் எட்டு கைகளுடன் தோன்றினாள்.


74. ‘‘ஹே! அறிவிலியே! என்னைக்கொன்று என்ன பயன், உனக்கு முடிவு செய்ய ஒருவன் அவதரித்து விட்டான். எங்கோ பிறந்துவிட்டான். எனவே, ஒன்றும் அறியாத குழந்தைகளை வீணாக துன்புறுத்தாதே‘ என்று சொல்லி மறைந்தாள்.

75. முட்டாளே என்று தொடங்கி அறிவிலியே என முடிவடையும் இந்த க்ருஷ்ணாவதாரத்தைக் கேட்பவர்கள், சொல்பவர்கள் எழுதுபவர்கள் அறியாமை இருளினின்று விடுபட்டு ஒளிமயமான வாழ்வு அமையப் பெறுவார்கள் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை.

# மார்கழி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 17/12/2020 | வியாழன் | உத்ராடம் தேர் |
| 17/12/2020 | வியாழன் | உத்ராடம் பாராயணம் |
| 19/12/2020 | சனி | அவிட்டம் தேர் |
| 19/12/2020 | சனி | அவிட்டம் பாராயணம் |
| 20/12/2020 | ஞாயிறு | சம்பா ஷஷ்டி |
| 22/12/2020 | செவ்வாய் | தனுர் வ்யதீபாதம் |
| 25/12/2020 | வெள்ளி | ஸர்வ வைகுண்ட ஏகாதசி |
| 26/12/2020 | சனி | த்வாதசி |
| 27/12/2020 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| 29/12/2020 | செவ்வாய் | தத்தாத்ரேய ஜயந்தி,<br>ஆருத்ரா அபிஷேகம், பௌணர்மி பூஜை |
| 30/12/2020 | புதன் | ஆருத்ரா தர்சனம் |
| 09/01/2021 | சனி | அனுஷம் தேர் |
| 09/01/2021 | சனி | ஏகாதசி |
| 10/01/2021 | ஞாயிறு | அனுஷம் பாராயணம் |
| 10/01/2021 | ஞாயிறு | த்வாதசி, பௌணர்மி பூஜை |
| 11/01/2021 | திங்கள் | மூலம் தேர் |
| 12/01/2021 | செவ்வாய் | ஹனுமந் ஜயந்தி |
| 13/01/2021 | புதன் | உத்ராடம் தேர் |
| 13/01/2021 | புதன் | உத்ராடம் பாராயணம் |
| 18/12/2020, 25/12/2020, 01/01/2021, 08/01/2021 - 15/01/2021 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 31



## நடராஜன் கலைமகள்

1947 ஆம் வருடம் வ்யாஸ பூஜை வசந்த க்ருஷ்ணாபுரத்தில் பெரியவா நடத்தினார்கள். நடந்தது ஸ்வாரஸ்யமான விஷயம். பொதுவாக சாதுர்மாஸ்யம் நடப்பதற்கு ஒரு மாதம் முன்னே தீர்மானிப்பார்கள். எந்தவிடத்தில் என்பது தெரிந்தால் அருகில் உள்ள கோவில்களிலிருந்து ப்ரஸாதம் கொண்டு வருவார்கள். அருகில் உள்ள நகர க்ராம ஜனங்கள் வந்து தர்சனம் பேருவார்கள். இந்த வருடம் எங்கே என்பது தீர்மானிக்கப்படவில்லை. பெரியவா போகலாம் என்று பல்லக்கில் ஏறி கிளம்பிவிட்டார்கள். அனேகமாக திருக்கோவிலூர் பக்கம் என்று ஹேஷ்யமாகத் தெரிந்தது. ராத்ரி பல்லக்கைச் சுமந்துகொண்டு போகிகள் போகிறார்கள். வழி தெரியவில்லை.

பல்லக்கை நிறுத்தி வழியில் யாரேனிடத்தில் கேட்க உத்தரவு ஆயிற்று. அப்போது ஆள் அரவம் கேட்டது. அவர்களிடம் கேட்டதற்கு இந்தப் பாதை திருக்கோவிலூருக்குத்தான் போகிறது, பக்கத்து வழி சுற்று வழி. இப்பாதையில் போனாலே திருக்கோவிலூருக்குச் சென்று விடலாம் என்று கூற அங்கு வந்த க்ராமத்து மக்கள் வணங்கி நிற்க அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டு கிளம்பினார்கள். இரண்டு மூன்று க்ராமங்கள் தாண்டி வசந்த க்ருஷ்ணாபுரத்தை அடைந்தோம்.

கும்மிருட்டு. தீவட்டி வெளிச்சத்தில் போகிகளின் நாமாவளியைக் கேட்ட அக்ரஹாரஜனங்களும், குடியானவர்களும் சூழ்ந்து கொண்டனர். அங்கேயிருந்தது ஒரே மாடி வீடு. மற்றதெல்லாம் குடியானவர்கள் வீடுகள். மொட்டை மாடி. வீட்டுக்காரர் அங்கு நிற்கிறார். குடியானவர்களும் அங்கு நிற்கின்றனர். ஸ்வாமிகள் எல்லாரையும் பார்த்து இந்த ஊரிலே இரண்டு மாதம் தங்கலாமா'' என்றுகேட்க பதில் சொல்லாமல்

தயக்கத்துடன் நின்றனர். கண்ணீர் வடிக்கின்றனர். இதைப் பார்த்து ஸ்வாமிகள் ஏன் என்ன தயக்கம் என்று கேட்க ஆடு, மாடு குடிக்கக் கூட தண்ணீர் இல்லை.

ஸ்வாமிகள் எப்படி தங்க முடியும் அந்த பாக்யம் எங்களுக்கில்லை என்கின்றனர். ஸ்வாமிகள் புன்னகைத்து போய் படுத்துக் கொள்ளுங்கள். காலைப் பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறி சவாரியை மாடி வீட்டு வாசலிலேயே கட்டச் சொல்கிறார்கள். ஸ்வாரஸ்யமான உரையாடல். கோபாலா மேற்கே மின்னலா? ஆம் கீழ்காற்று வீசுகிறதா? ஆம் மழை வருமோ? வரலாம் சரி நீ போய் படுத்துக்கோ.

அதன் பின் ஒரு மணி நேரம் கழிய இடி மின்னல் காற்றுடன் பெருமழை பொழிகிறது. அருகில் உள்ள பெண்ணை நதி பெருக்கெடுத்து ஓடுகிறது. எங்கும் வெள்ளக்காடு. அந்த ஊரைச்சுற்றி வாய்க்கால்களில் வெள்ளம். க்ராம ஜனங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. சாதுர்மாஸ்யம் முடிந்து நவராத்ரியும் க்ராம ஜனங்களின் விருப்பத்திற்கு இணங்க அங்கே நடை பெற்றது. என்னே பாக்யம். என்னே பாக்யம்.


■ இந்த பஞ்சாக்ஷரம் என்பது சிவ பஞ்சாக்ஷரம் என்பது, யஜுர் வேதத்தினுடைய மத்தியிலே, விசேஷமாக அமைந்திருப்பது, அனைவரும் கௌரவிக்க வேண்டிய ஒரு விஷயம்.

■ ஸ்ரீ ருத்ரப் ப்ரச்னத்திலே நமஸ்காரம், சமகத்தின் மூலமான, லோகத்திற்கு தேவையான, பௌதீகமான ஐச்வர்யங்கள்ளிருந்து ஆரம்பித்து, ஈச்வர அநுக்ரஹம் வரையிலே, ஞானம் வரையிலே ப்ரார்த்தனை.



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயரி தீர்க்கும் "இலவச காப்பகம்"**




ஏழை புற்றுநோயாளிகளின் நிரந்தர பாதுகாவலர் !!

அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு வரும் ஏழை புற்று நோயாளிகள் அடையாறில் உள்ள ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் **நம்ம தர்மசாலாவில்** தங்க வைக்கப்பட்டு, மூன்று வேளை சத்தான, சுவையான, சைவ உணவு ஆகியவை **முற்றிலும் இலவசமாக** வழங்கப்பட்டு சிறப்புடனும், கொரோனா கால விதி முறைகளுக்கு உட்பட்டு பாதுகாப்பாகவும் பராமரிக்கப் படுகிறார்கள். **நல்லவர்கள் கொடுக்கும் நன்கொடையால் மட்டுமே நடைபெறும் இத்திருப்பணியில் உங்களையும் இணைத்துக்கொள்ள ஸ்ரீ மாதா டிரஸ்ட் வேண்டுகிறது.**




பாதுகாவலரின் வழி தொடரும் இளையவர்... சுடில்லா சேவகர் !!

***முதுமை***யில் தனிமை, அதனுடன் வறுமை – இதைவிடக் கொடுமை இவ்வுலகில் ஏதுமில்லை. அன்பாய் பேசி–ஆதரவாய் அரவணைத்திட எவரும் அற்ற நிலையில், பசித்த

மனிதநேயம் மிக்க வாசகர்களே ! வரவிருக்கும் தீபாவளி பண்டிகையன்று நம்ம தரமசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளை தங்களது சொந்தங்களாக பாவித்து அவர்கள் பசி தீர உதவி செய்யுங்கள். **தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியாக மட்டுமல்லாமல் மனநிறைவுடனும் கொண்டாடுங்கள்.**



Executive Trustee
P.Akashram serving our inmates



**வயிறுடன் தங்கள் வேதனையை மரணம் மட்டுமே தீர்க்கும் என்று தவித்திருக்கும் நம்மை ஈன்றெடுக்காத தாய்-தந்தையருக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்?** என்பது போன்ற எண்ணற்ற கேள்விகளை **தன் இளம் வயதில் ஈன்ற தாயை இழந்து, இன்று வரை அந்த தாயன்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் "ஏழை புற்றுநோயாளிகளின் பாதுகாவலர்" திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இத்தனை ஆண்டு காலம் தனக்குள்ளே கேட்டுக் கொண்டதற்கு விடையாகவும், ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா அவர்கள் நிறைவேற்ற எண்ணியிருந்த பல தர்ம கார்யங்களில், அவருக்கு மிகவும் பிடித்த தர்மத்தின் செயல்வடிவமாகவும்,** ஸ்ரீ மாதா டிரஸ்டின் மற்றுமொரு பரிணாமமாகவும் உருவாக உள்ளது ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லம்.

**முற்றிலும் இலவசமாக** செயல்படவிருக்கும் நமது முதியோர் இல்லம் ஆதரவற்ற, ஏழை முதியவர்களை அடைத்து வைக்கும் கொட்டகையாக இல்லாமல், முதியவர்கள் சௌகர்யமாய் தங்குவதற்கான வசதிகளை கொண்டதாகவும், மரங்கள் அடர்ந்த காற்றோட்டமான இயற்கைச் சூழலிலும், படுக்கை வசதி, சுகாதாரமான கழிப்பறை, சுத்தமான குடிநீர் ஆகியவற்றுடன் கூடிய விஸ்தாரமான தங்கும் அறைகளுடனும், முதலுதவிக்கான மருத்துவ வசதி, இலவச ஆம்புலன்ஸ் சேவையுடனும் சென்னைக்கு மிக அருகாமையில் அமைய உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



இம்மாபெரும் தர்மத்தேரின் வடம் பிடிக்க ஸ்ரீ மாதா டிரஸ்ட், மனிதநேயம் மிக்கவர்களை அனைவரையும் இருகரம் கூப்பி அழைக்கின்றது.

**இன்று நாம் பல்வேறு நிலைகளில் வசதியுடன் இருந்தாலும்,** நமது மகிழ்ச்சியான வாழ்வுக்கும், இச்சமுதாயத்தில் நாம் உயர்ந்த நிலையை எட்டுவதற்கும், அயராது பாடுபட்ட நம் தாய்–தந்தையர் இன்று நம்முடன் இல்லையே? சகல செல்வங்களுடன் இன்று நாம் ஆனந்தமாய் வாழும்போது நமது பெற்றோர்கள் நம்முடன் இருந்திருந்தால், அவர்களை மகிழ்வித்து மகிழ்ந்திருக்கலாமே? என்கிற தீராத மனவேதனைகளுடன் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே நிதர்சனமான உண்மை.

**நமது மனசாட்சியை அன்றாடம் வதைத்துக் கொண்டிருக்கும் இவ்வேதனைக்கு வடிகாலாய் ஸ்ரீ மாதா டிரஸ்ட் ஸ்தாபிக்கவிருக்கும் முதியோர் இல்லம் அமையும் என்பது எங்களது நம்பிக்கை.**

சுமார் **3 கோடி ரூபாய்** செலவில் அமைய உள்ள நமது இலவச முதியோர் இல்லத்தில் தங்கும் அறை ஒன்றை அமைத்திட **5 லட்சம் ரூபாய்** செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. **இத்தொகையை நன் கொடையாக அளிப்பதன் மூலம் நீங்கள் விரும்பும் ஒருவரின் பெயரிலோ; உங்களது பெற்றோரின் பெயரிலோ; நீங்கள் பெரிதும் மதிக்கும் உங்கள் மூதாதையரின் பெயரிலோ, அவர்தம் நினைவைப் போற்றும் வகையில் ஒரு அறை அமைக்கப்படும்.**

நமது வாழ்வில் ஒளி வீச மெழுகாய் உருகிய நமது பெற்றோர்கள் / மூதாதையர்களின் நினைவு களை காலத்தின் கல்வெட்டுகளில் நிரந்தரமாய் இடம்பெறச் செய்வது, நாம் ஓரளவேனும் அவர்க ளுக்கு செய்யும் கைம்மாறாகவே அமையும்; மேலும் இதனால் உண்டாகும் பெருமையும், புண்ணியமும் உங்களுக்கும், உங்களது பல தலைமுறைகளுக்கும் என்றென்றும் நீடித்து நிலைத்திருக்கும் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை.

ஸ்ரீ மாதா டிரஸ்ட், இந்த தர்ம காரியத்தை செயல்படுத்துவதற்கு ஏதுவாக, உலகப் பிரசித்தி பெற்ற ஹோட்டல் சரவணபவன் உரிமையாளர்கள் திருமதி



R.வள்ளியம்மாள் - திரு P.இராஜகோபால் அவர்கள், சென்னைக்கு அருகில் மாமண்டூர் கிராமத்தில் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அவர்களது ஒன்றரை ஏக்கர் நிலத்தை ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா அவர்களின் காலத்திலேயே ஒரு முறையான பதிவு செய்த பத்திரத்தின் மூலமாக நமது ஸ்ரீ மாதா டிரஸ்ட் அறக்கட்டளைக்கு தானமாக வழங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.






ஆதரவற்ற ஏழை முதியோர் களுக்காக முற்றிலும் இலவசமாக செயல்பட உள்ள நமது **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்ல** கட்டட நிதியாக **ரூ.5,00,000/-** வழங்குவோர் விரும்பும் நபரின் பெயரில், அம்முதியோர் இல்லத்தில் முதியோர்கள் தங்குவதற்கு ஏதுவாக அறை ஒன்று அமைக்கப்படும் அல்லது தாங்கள் விரும்பும் தொகையையும் நன்கொடையாக வழங்க லாம். அவ்வாறு வழங்குவோரின் பெயர் நாம் ஸ்தாபிக்க உள்ள மாபெரும் இலவச முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

**தங்களது சொத்துகளுக்கு வாரிசு இல்லையே** *என்று ஏங்குவோர் இந்த தர்மச் செயலுக்கு உதவி செய்வதன் மூலம் தங்கள் மன வேதனையை நிரந்தரமாய் நிவர்த்தி செய்து கொள்ள முடியும்; மேலும், உடல்நிலையை உங்கள் மீது அன்பு காட்டி உதவி செய்யாத உறவினர்களுக்கும் அவர்களது சந்ததியினருக்கும் உங்கள் சொத்து மொத்தமாக சென்று சேர்வதைக் காட்டிலும்* **இந்த நற்செயல் உயர்ந்த புண்ணியம் அல்லவா?** சிந்திப்பீர்... இன்றே செயலாற்றுவீர்...

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்:**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by **CHEQUE / NEFT / CASH / M.O.**

- Account Name: SRI MATHA TRUST
- Bank Name: INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20.
- Current A/c No.: 163502000001090
- IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S. 80(G) of the Income Tax Act.

ADMIN OFFICE: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020. Tel : 044 - 2442 0727, 4266 1687 Mobile: 9500001065 / 9003247857

NAMMA DHARMASALA: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-4509 8647

vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# ஸம்ஸ்கிருத மாநில மகா நாடு

*திருச்சி ஸம்ஸ்கிருத ஸாஹித்ய பரிஷத்தின் வார்ஷிக வித்வத் ஸதஸ் 13, 14-5-77 ஆகிய இருதினங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை உயர் நீதிபதி கனம் வி. ஸேதுராமன் விழாவினைத் தொடங்கிவைத்தார். கேரள ஸர்வகலாசாலைத் துணை வேந்தர் டாக்டர் ஆர். எஸ். கிருஷ்ணன் தலைமை வகித்தார். ஸம்ஸ்கிருத மொழியின் சிறப்பைப் போற்றி, அதனைக் காப்பதில் பண்டை முறையுடன் புதிய முறைகளின் சிறப்பான அம்சங்களையும் இணைத்து ஸ்ம்ஸ்கிருத இலக்கியத்தை எல்லோரும் படிக்கும்படி திட்டங்களை வகுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.*

*திருச்சி ஸம்ஸ்கிருத ஸாஹித்ய பரிஷத் கடந்த நாற்பது ஆண்டுகளாக மக்களுக்கு ஸம்ஸ்கிருத மொழியைப் போதிப்பதற்காகவும், ஸம்ஸ்கிருத பிரசாரத்திற்காகவும் பலவழிகளில் ஸேவை செய்து வருகிறது. இதன் தொண்டு மேலும் சிறப்பாக நடைபெற இறைவனை வேண்டுகிறோம். ஸாஹித்ய பரிஷத்தின் ஆண்டுவிழா தொடர்பாக 15-5-77 அன்று தமிழ் நாடு மாநில ஸம்ஸ்கிருத ஸம்மேளனமும் நடைபெற்றது. கேரள ஸர்வ கலாசாலைத் துணை வேந்தர் டாக்டர் ஆர். எஸ். கிருஷ்ணன் இந்த ஸம்மேளனத்தை தொடங்கி வைத்தார். சென்னை ஸம்ஸ்கிருத கல்விக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்த ஸம்மேளனத்திற்கு ஸ்ரீ டி. வி. விச்வநாத அய்யர் தலைமை தாங்கினார். திருச்சி, தஞ்சை , கோயம்பத்தூர், திருநெல்வேலி, மதுரை, தென்னார்க்காடு, சேலம், செங்கல்பட்டு, சென்னை முதலிய இடங்களிலிருந்து அறுபதுக்கும் மேல்பட்ட பண்டிதர்களும் பலபிரமுகர்களும், பல ஸ்தாபன பிரதிநிதிகளும் மகாநாட்டில் பங்கு கொண்டனர். ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ முக-ப்ரஸாதத்தை விசேஷ பிரதிநிதி மூலமாக அனுப்பிவைத்து அநுக்ரஹித்தார்கள்.*

*மகாநாட்டில் ஸம்ஸ்கிருத அபிவிருத்திக்கான திட்டங்கள் விவாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டன.*

***அதன் ஸாரம் :-***

*1. ஸம்ஸ்கிருத போதனையில் தாமாகவே ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்களுக்குத் தாராளமாக மான்ய உதவி அளிக்க வேண்டும்.*

*2. கிராமங்களில் பண்டைய கால முறைப்படி வாழ்க்கையை நடத்த விரும்பும் ஆசிரியர்கள், பண்டிதர்கள் அங்கேயே தங்க சாஸ்திர ப்ரவசனங்கள் நடத்த வசதி செய்து பள்ளி, கல்லூரி போன்றவைகளுக்கு மான்ய உதவி அளிப்பது போல, இந்தக் குருகுல முறைக்கும் மானியம் அளித்துக் காப்பது.*

3. ஓ. எஸ். எல்.ஸி. பள்ளிகள் அதிகமாக நாடெங்கிலும் ஏற்படவேண்டும், மத்ய அரசு ஏற்படுத்தும் வாரியத்தின் கீழ் இவை செயல்படவேண்டும். இதில் படித்துத் தேறியவர்கள் எந்த பல்கலைக்கழகத்திலும் சேரக்கூடிய தகுதி அங்கீகரிக்கப்படவேண்டும்.

4. ஸம்ஸ்கிருதக் கல்லூரிகள் ஸ்தல பல்கலைக் கழகத்துடனோ அல்லது மத்திய பல்கலைக் கழகத்துடனோ அல்லது பல்கலைக் கழகத்துக்குச் சமமான ஒரு ஸ்தாபனத்துடனோ சேர அநுமதிக்கப்பட வேண்டும்.

5. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஸம்ஸ்கிருத விவாத அரங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். ஸம்ஸ்கிருதத்திலேயே பேசவும், பேச்சுப் போட்டிகள் மாவட்ட மட்டத்திலும், அகில இந்தியமட்டத்திலும் நடைபெறவேண்டும். பண்டிதர்கள் கலந்து கொண்டு மகா நாட்டின் நடவடிக்கைகள் ஸம்ஸ்கிருதத்திலேயே நடைபெறச் செய்ய வேண்டும். இவ்வாறான முயற்சிகளின் மூலம் ஸம்ஸ்கிருதம் பேசிப் பழகும் மொழியாக ஆகமுடியும்.

6. ஸம்ஸ்கிருத கல்லூரிகளில் கலைப்பாடங்கள் முதலியவைகளைச் ஸம்ஸ்கிருத மொழியிலேயே பயிலவழி செய்ய வேண்டும்.

7. பண்டிதற்களுக்கென நவீன அறிவு பற்றிய ''எக்ஸ் டென்ஷண்'' பிரசங்கங்கள் ஓர் ஆண்டுக்கானவை ஏற்பாடு செய்யப்படவேண்டும். இதனால் ஸம்ஸ்கிருத அறிவுபடைத்தவர்களுக்குப் பொது அறிவும் ஏற்படக் காரணமாகும்.

8. நவீன அறிவுபற்றிய விஷயங்களைக் கொண்ட புத்தகங்கள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்படவேண்டும். தனிப்பட்டவர்களே இதைத் தயாரிக்கவேண்டும். சிறந்தவைகளுக்குப் பரிசு அளிக்க வேண்டும். இதற்கான ஆசிரியர் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

9. தினசரிப் பத்திரிகைகளும், வார-மாத பத்திரிகைகளும் ஸம்ஸ்கிருத மொழியில் அதிகம் வெளிவர ஊக்குவிக்க வேண்டும்.

10. ஸம்ஸ்கிருதத்தில் இலக்கியப் புத்தகங்கள், வெளிவருவது குறைந்து வருகிறது. பரீக்ஷைக்கான பல ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் கிடைப்பதே அரிதாக உள்ளன. பம்பாய், புனா, சென்னை, காசி போன்ற இடங்களிலிருந்து பல ஸம்ஸ்கிருத நூல்களை அச்சிட்டு வந்த அச்சகங்கள், இப்பொழுது அவ்வாறு அச்சிட முடியாத நிலையில், பல ஸம்ஸ்கிருத நூல்கள் கைவசம் இருந்தவை தீர்ந்தும் மறுபடி அச்சடிக்க முடியாத நிலையில் உள்ளன. இவை மறுபடி அச்சாக உதவவேண்டும். லாப நஷ்டம் இல்லாத அடிப்படையில் மாநிலத் தலை நகரங்களில் ஸம்ஸ்கிருத நூல்களை விற்கும்

நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். இதனால் ஸம்ஸ்கிருதம் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படவும் காரணம் ஆகும்.

11. தபால் மூலம், ரேடியோ மூலம் ஸம்ஸ்கிருத கல்வி போதனைக்கான திட்டம் வகுக்கப்படவேண்டும். ரேடியோவில் ஸம்ஸ்கிருதத்தில் செய்தி ஒலி பரப்புதல் பெரும் சேவையே ஆகும். ஆனால் ஸம்ஸ்கிருத மொழியின தொன்மையில் கவனம் வெண்டும்.

12. சம்ஸ்கிருதத்தில் நாடகங்களை நடிப்பது ஆதரிக்கப்பட வேண்டும். அதில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்களை மானிய உதவி அளித்து ஊக்குவிக்க வேண்டும்.

13. ஒவ்வொரு மாநிலத்துக்கும் - முக்கியமாகத்தென் மாநிலங்களில் மத்திய அரசு ஒரு குழுவை நியமிக்க வேண்டும். பாதி அதிகார பூர்வமுள்ள இந்தக் குழு எந்தெந்த ஸ்தாபனத்துக்கு எவ்வளவு மான்யம் அளிப்பது என்பது போன்ற ஸம்ஸ்கிருத ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட பல விஷயங்களை ஆராய்ந்து, தக்க உதவி அளித்து ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறான பல தீர்மானங்கள் மகாநாட்டின் தலைவரால் கொண்டு வரப்பட்டவை பிரதிநிதிகளால் பரிசீலிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**ஸம்ஸ்கிருதத்தைப்பற்றிக் காலஞ் சென்ற பண்டித ஜவாஹர்லால் நேரு ஒரு சமயம் கூறியதாவது:-**

இந்தியாவினிடமுள்ள மாபெரும் பொக்கிஷம் எது? அதன் பாரம்பரியம் என்ன? என்று யாராவது என்னைக் கேட்டால், ஸம்ஸ்கிருதமொழியும், அதில் உள்ளவையெல்லாம் என்று தயக்கமின்றிக் கூறுவேன். இது நீடித்து இந்நாட்டு மக்களின் வாழ்க்கையில் இடம் பெற்றுவரும் வரை இந்தியாவின் மேதா விலாசம் தொடர்ந்து பிரகாசிக்கும். ஆகவே தனிப்பட்டவர் நலனில் மட்டுமின்றி தேசத்தின் நலனை முன்னிட்டும் இந்த அரிய பொக்கிஷத்தைக் காக்கவும், அபிவிருத்தி செய்யவும் நம்மால் ஆனதைச் செய்ய வேண்டும்.''

இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் தான் இந்து, பாரத தேச பாரம்பரியத்தைச் சார்ந்தவன் என்ற எண்ணம் வேண்டும். தாய் பாஷை எதுவானாலும், உத்தியோகத்திற்காக எந்தப் பாஷையைப் படிப்பதானாலும் அத்துடனேயே தனக்கு உரித்தான பாஷை ஸம்ஸ்கிருதபாஷை என்ற நினைப்பும் வேண்டும். ஆகவே இந்த ஸம்ஸ்கிருத பாஷையைப் பள்ளி நேரமில்லாத காலை மாலை நேரங்களில், அதைப் போதிக்கும் ஸ்தாபனங்களில் சேர்ந்து பயில வேண்டும். முக்கியமான நகரங்களிலெல்லாம் இலவசமாகப் போதிக்கப்பட்டு வருகிறது. ஆகவே பெற்றோர்

தம் குழந்தைகளை இந்த ஸ்தாபனங்களுக்கு அனுப்பிவைத்து இந்தப் பாஷையைச் சிறு வயதிலிருந்தே பயிலுமாறு செய்ய வேண்டும். பாஷையை எல்லோரும் கற்றுக் கொள்வதற்கான திட்டம், மற்றும் சாஸ்திரங்களை விசேஷமாகக்

கற்றுணர்ந்து அதில் பண்டிதனாக விளங்க, அதற்கென உள்ள வித்யா சாலைகளில் பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்பிக்க வேண்டும். அவ்வாறு சாஸ்திரத்தைப் அப்பொழுது ஸம்ஸ்கிருத ஸம்ஸ்கிருத மாநில மகாநாடு பயிலும் மாணவன் ஒரு குறிப்பிட்ட பிரிவில் சில வருஷங்கள் படித்துப் பட்டம் பெறுவதுடன் அவன் படிப்பு முடிந்ததாகவும் ஆகாது. அது வாழ்க்கைக்கு உதவியாகவும் ஆகாது. படித்துப் பட்டம் பெற்ற சாஸ்திரத்தையே தொடர்ந்து அப்யஸிக்கவும், அத்துடன் தொடர்பு கொண்ட மற்றச் சாஸ்திர விஷயங்களை அறிந்து கொள்ளவும், குறிப்பிட்ட பிரிவில் ஆராய்ச்சி செய்யவும் அந்த மாணவனுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். இவ்வித ஒரு சந்தர்ப்பத்தை மத்திய அரசு ஒன்றினால் தான் அளிக்க முடியும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு மூன்று ஸம்ஸ்கிருத வித்யாபீடங்களை நிறுவி அவைகளில் சாஸ்திரங்களைப் பயின்று பட்டம் பெற்றவர்களைச் சாஸ்திரங்களில் ஆராய்ச்சி செய்ய நியமிக்க வேண்டும். அவர்களுக்குத் தக்க ஊதியமும், சமமான அந்தஸ்தும் அளிக்க வேண்டும். இவ்வாறு வாய்ப்பு அளிக்கப்பட்டால் பல மாணவர்கள் சாஸ்திரங்களைப் படிக்க முன்வருவார்கள். அப்பொழுது சாஸ்திரங்கள் காக்கப்படும்.

ஸம்ஸ்கிருத பாஷையில் உள்ள லட்சக்கணக்கான நூல்களில் ஒன்றான மகாபாரதம் பற்றிக் கூறக் காண்பதாவது - ‘இதில் உள்ளது மற்றவைகளில் இருக்கிறது ; இதில் இல்லாதது வேறு எங்கும் இல்லை

**யதிஹாஸ்தி ததன்யத்ர யன்னேஹாஸ்தி தத் ந குத்ரசித் ।।**

மகாபாரதம் ஒன்றுக்கே இத்தனை சிறப்பு என்றால் ஸம்ஸ்கிருத பாஷையின் பெருமையைத்தான என்னவென்று கூறுவது? இந்தியாவின் ஆத்மாவே ஸம்ஸ்கிருதத்தில் தான் இருக்கிறது. நம் கலாசார பாரம்பரியத்தின் ஜீவன் ஸம்ஸ்கிருதமே. இதைப் பேணிக்காப்பது ஒவ்வொரு இந்துவின் கடைமையாகும்.

# இறைவனை நம்புவதற்கு ஏழு காரணங்கள்

காலஞ்சென்ற ஸ்ரீ க்ரெஸ்ஸி ஏ. மாரிஸன் அவர்கள் விஞ்ஞான வர்த்தக-சமூகத் துறைகளில் கியாதி பெற்ற ஓர் அமெரிக்கப் பேரறிஞர். காந்த அலைப் பிரதேசத்தில் ஆக்ஸிஜனையும் நைட்ரஜனையும் பிரிப்பதற்கு வழி கண்டுபிடித்தவர். இவர் நியூயார்க் விஞ்ஞான அகடாமியின் தலைவராக இருந்திருக்கிறார். கடவுள் உண்டு, கட்டாயம் உண்டு, கண்டிப்பாக உண்டு என்பதற்கு இந்தப் பிரபல விஞ்ஞானி ஏழு அழுத்தமான காரணங்களை இலக்கியச் சுவையுடன் விவரிக்கிறார்.

நாம் இன்னமும் விஞ்ஞான யுகத்தின் உதய காலத்தில் தான் இருக்கிறோம். விஞ்ஞானத் துறையில் புதிதாகப் பரவி வரும் ஒவ்வோர் அறிவொளிக் கீற்றும் பேரொளி படைத்த ஒரு சிருஷ்டி கர்த்தாவின் கைத்திறனையே வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. டார்வின் காலத்திலிருந்து நாம் பிரம்மாண்டமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கிறோம். உண்மையைக் காண வேண்டும் என்பதில் எவ்விதச் சொந்தச் சார்பும் இன்றி - எளிமையாகச் செல்வோமாயின், ஞானத்தில் வேரூன்றிய நம்பிக்கையுடன் முன்னேறுவோமாயின், இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் மூலம் மேலும் மேலும் ஆண்டவன் இருக்கிறான் என்ற உணர்வினை நெருங்குவதாகவே தெரியும்.

என்னுடைய கடவுள் நம்பிக்கைக்கு ஏழு காரணங்களை விரல் விட்டு எண்ணிக் காட்ட முடியும்.

முதலாவது சற்றும் பிழையற்ற கணித நியதியைக் கொண்டு, நமது இந்தப் பிரபஞ்சம் ஒரு மகத்தான, செயலாற்றல் பொருந்திய, பேரறிவால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதென நிரூபிக்கலாம்.

ஒன்றிலிருந்து பத்துவரை இலக்கமிட பத்து நாணயங்களை உங்கள் பாக்கெட்டில் போட்டுக் கொள்வதாக வைத்துக்கொள்வோம். பாக்கெட்டில் போட்டுக் கொண்ட பின் அவற்றை நன்கு குலுக்குகிறீர்கள். பிறகு அவற்றை வெளியே எடுக்கையில் சரியாக ஒன்றிலிருந்து பத்து வரை வரிசையாக எடுக்க வேண்டும். 'ஒன்று' என்பதை முதலில் எடுப்பதற்கு நீங்கள் பத்து முறை ஒவ்வொரு நாணயமாக எடுத்தால் போதும். அவற்றுள் ஒன்று நிச்சயமாக ஒன்றாம் இலக்கமிட்டதாகத்தான் இருக்கும். ஆனால் ஒன்று, இரண்டு ஆகிய இரு நாணயங்களையும் - வரிசை தப்பாமல் எடுக்க

வேண்டுமாயின் நீங்கள் நூறு முறைகூட இரண்டிரண்டு நாணயங்களாக எடுத்தாக வேண்டி யிருக்கும். 'ஒன்று', 'இரண்டு', 'மூன்று' ஆகிய மூன்று நாணயங்களையும் வரிசை தப்பாமல் எடுப்பதற்கு ஆயிரம் முறை எடுக்க நேரலாம். இப்படியே சொல்லிக் கொண்டு போனால், ஒன்றிலிருந்து பத்து வரை சகல நாணயங்களையும் வரிசை பிசகாமல் எடுப்பதற்கு நீங்கள் ஆயிரம் கோடி முறைகூட முயற்சி செய்ய வேண்டி யிருக்கலாம். இது நம்ப முடியாத எண்ணிக்கை. ஆனால் கணித நிபுணர்கள் சொல்வார்கள். இத்தனை கோடி வாய்ப்பு இருந்தால்தான் நிச்சயமாகப் பத்து நாணயங்களையும் வரிசைக் கிரமமாக எடுக்க முறை இயலும் என்று.

இது ஒருபுறம் இருக்கட்டும். மனித வாழ்வும், பல்வேறு மிருகங்களின் வாழ்வும், பலப் பல தாவரங்களின் வாழ்வும் இந்த உலகத்தில், இசைவாக நடப்பதற்கு எத்தனையோ கண்டிப்பான தேவைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டியிருக்கிறது. பத்து நாணயங்களை வரிசைப்படுத்தி எடுப்பதற்கே ஆயிரம் கோடி வாய்ப்புத் தேவை எனில், மானுட - மிருக - தாவர வாழ்வுக்கான ஆயிரமாயிரம் தேவைகளை - ஒன்றோடொன்று சன்ன பின்னலாகத் தொடர்புண்ட தேவைகளை கிரமமாகப் பூர்த்தி செய்வதற்கு வெறும் உயிரற்ற இயற்கையின் பரிணாமத்தை மட்டும் அடிப்படை கொண்டால், எண்ணியும் பார்க்க முடியாத வாய்ப்பு இருக்க வேண்டும். இந்த வாய்ப்பு' ஏதோ ஒருமுறை மட்டும் நேராமல், யுக யுகாந்திரமாகத் தொடரவும் வேண்டும். எனவே இந்த நீண்ட கால வெள்ளத்தில் இத்தனை ஆயிரம் உயிரினங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் இயற்கை வாய்ப்பு ஒரு காலும் ஏற்பட்டிருக்க முடியாது எண்பது திண்ணம்.

இன்று உலகம் தனது அச்சில் மணிக்கு ஆயிரம் மைல் வீதம் தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது. இதுவே ஆயிரத்துக்குப் பதில் நூறு மைலாக இருக்குமாயின் நமது இரவும் பகலும் இன்றிருப்பது போல் பத்து மடங்கு நீண்டவையாக இருக்கும். அதாவது மனித உடலின் உழைப்புக்கும் ஓய்வுக்கும் அந்த நீண்ட இரவும் பகலும் ஒரு விதத்திலும் சம்பந்தப்பட்டிராது. இன்றைய இரவைப் போல் பத்து மடங்கு நீண்ட இரவில் அதாவது இன்றையக் காலக் கணக்குப்படி ஐந்து முழு நாட்கள் முற்றிலும் இருளாகவே இருக்குமாயின் மனித வாழ்க்கை நடத்துவது எவ்வளவு சிரமமாக இருக்கும்? அதுமட்டுமல்ல, இன்றைய பத்துப் பகல்கள் ஒரு பகலாயின் சூரிய வெப்பத்தில் நம் பயிர், பச்சைகள் அனைத்தும் எரிந்தே போய்விடும். பத்து இரவு ஓர் இரவாயின், அத்தனை வெப்பத்துக்கும் ஈடு கொடுத்துத் தவறிப் போய் ஏதேனும் ஒரு முளை தோன்றியிருந்தால்கூட அது அப்படியே குளிரில் உறைந்து செத்து விடும்.

மனித வாழ்வுக்கும், தாவர வாழ்வுக்கும் இவ்வளவு இசைவாக உலகம் தன் அச்சில் சுற்றுவது. உயிரற்ற இயற்கையால் ஏற்பட்டிருக்க முடியுமா? அல்லது திட்டமிடும் ஒரு பேரறிவின் இயக்கத்தால் இருக்குமா? நீங்களே சொல்லுங்கள்.

சூரியனின் மேல் பரப்பில் நிலவும் உஷ்ணம் 120000 (பாரன்ஹீட்) ஆகும். இன்று நம்முடைய உலகம் அதிலிருந்து சுமார் ஒன்பது கோடி மைல் தள்ளி யிருப்பதால் இந்த நிரந்தரமான நெருப்புக் கோளம் நமக்கு இதமாக வெப்பம் அளித்துத் தாவரங்களுக்கு உயிரூட்டுகிறது. இன்றிருப்பதில் பாதியளவே சூரிய வெப்பம் பெற்றால் நாம் உறைந்து போக வேண்டியதுதான். இதுபோல் இரு மடங்கானால் நாம் அப்படியே வறுபட்டுப் பொசுங்கிப் போவோம். நமக்கு இவ்வளவு அநுகூலமாக இன்று சூரியனிடமிருந்து நாம் தள்ளியிருப்பது - இயற்கையின் அகஸ்மாத்தான வாய்ப்புத்தானா?

உலக கோளம் அச்சுக்கு 23 டிகிரி சாய்ந்திருப்பதாலேயே நம் ஆண்டில் வெவ்வேறு பருவங்கள் உண்டாகின்றன. வெய்யிலும், மழையும் உலக வாழ்வுக்கு அதுகூலமாக அமைய இந்தப் பருவங்கள் உதவுகின்றன. அவ்வாறில்லாவிடில் சமுத்திரத்திலிருந்து புறப்படும் ஆவி நேர் வடக்குத் தெற்காகப் பரவிக் கண்டங்களை யெல்லாம் பனியில் மூழ்கடித்து விடும். சந்திரன் இன்றிருப்பது போல் இரண்டு லட்சத்துச் சொச்சம் மைலில் இல்லாமல், 50,000 மைலில் இருந்தால் கடல் கொந்தளித்து எழும்பும் பேரலைகளில் தினமும் இருமுறை உலகமனைத்தும் முழுகிப் புறப்பட வேண்டி யிருக்கும்.

பூமியின் மேல் பரப்பு இப்போதிருப்பதை விட இன்னும் பத்தே அடி அதிகப் பருமனாக இருப்பின் பிராண வாயுவே இல்லாமல் உயிர் வாழ்வு முடிய வேண்டியதுதான். கடல்கள் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் ஒருசில அடிகள் ஆழமாக இருந்தால் கூடப் போதும், கரியமில வாயுவும் பிராணவாயுவும் அதனால் உறிஞ்சப்பட்டு உயிரினமே வாழ முடியாமல் போயிருக்கும். இன்று லட்சோபலட்சம் எரிநட்சத்திரங்கள் வான வெளியில் பொசுங்குகின்றன. இவற்றில் எதுவுமே நம் உலகின் மீது மோதுவதில்லை. நமது சூழல் மட்டும் இன்னும் சற்று லேசாக இருந்தால் இந்த ந எரிநட்சத்திரங்களில் பல உலகில் விழுந்து ஆங்காங்கே அக்னிதாண்டவத்தை உண்டாக்கியபடி இருக்கும்.

இவை போல் இன்னும் பற்பல திருஷ்டாந்தங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றை யெல்லாம் பார்த்தால் உலகில் உயிரினங்கள் வாழ்வதற்கான அநுகூல நிலை ஒருகாலும் வெறும் இயற்கை வாய்ப்பாக இராது என்று உறுதியாகச் சொல்லலாம்.

*சிந்தனா சக்தி படைத்த ஓர் அறிவு திட்டமிட்டுப் படைத்துத் தந்ததே பிரபஞ்சம் என உணரலாம்.*

**இரண்டாவது காரணம்:** *உயிர், உயிர் என்று ஏதோ ஒன்றைச் சொல்கிறோமே, அதற்கு உள்ள ஆற்றல் தான் எப்பேர்ப்பட்டது? தன் நோக்கங்களை நிறைவேற்ற அது எவ்வளவு அற்புதமாகச் செயல்படுகிறது ? இதுவே சர்வ வியாபகமான ஓர் அறிவின் அடையாளம் தான். உயிர் என்பது என்ன என்று யாருமே ஆழ்ந்து பார்த்துக் கண்டுபிடிக்கவில்லை. அதற்கு அளவை இருப்பதாகவோ, எடை இருப்பதாகவோ தெரியவில்லை. ஆனாலும் அதற்கு எத்தனை சக்தி இருக்கிறது? சிறிய வித்திலிருந்து கிளம்பும் வேரின் சக்தி பாறையையே பிளந்து விடுகிறது. மண்ணையும், நீரையும் விண்வெளியையும் வென்றிருக்கிறது இந்தச் சக்தி, பஞ்சபூதங்களின் பரஸ்பரத் தொடர்பையே தனக்கு இசைவாக மாற்றிக் கொள்கிறது இச் சக்தி.*

*உயிர் ஒரு சிற்பியாகிறது. உயிருள்ளவற்றுக்கு எல்லாம் உருவம் தருகிறது; உயிர் ஓர் ஓவியனாகிறது, மரங்களில் உள்ள அத்தனை இலைகளையும் பார்த்துப் பார்த்து வரைகிறது; செடியில் உள்ள அத்தனை மலர்களுக்கும் வண்ணம் தீட்டுகிறது. உயிர் ஓர் இசைக் கலைஞனாகிறது, விதவிதமான பட்சிகளுக்குத் தனித் தனியான காதல் கீதங்களைக் கற்றுத் தருகிறது; வண்டையும், தேனீயையும், குளவியையும், ஆயிரமாயிரம் கலவையான இசை மூலம் பரஸ்பரம் உறவாடச் செய்கிறது. உயிர் என்பது ஓர் உன்னத ரசாயன விஞ்ஞானியாகிறது. பழங்களுக்குள் ஏதோ ஒரு ரசத்தைப் பொழிந்து உண்டாக்குகிறது; ரோஜாப் பூவுக்குள் சுகந்தத்தை நிரப்புகிறது; நீரையும் 'இயற்கையில்' அமைந்த கார்பானில் அமிலத்தையும் கலந்து இனிய சர்க்கரையாக்குகிறது; மரமாக்குகிறது. அப்படி மரத்தை உண்டாக்கும்போதே அந்த மரமானது மனிதன் வெளி விடும் கரியமிலவாயுவை உட்கொண்டு மனிதனுக்கு வேண்டிய பிராணவாயுவை வெளிவிடுமாறும் செய்துவிட்டதே! ஆகா!*

*உயிரணுக்கள் பொதிந்துள்ள ப்ரோடோப்ளாஸத்தில் ஒரு வெகு நுண்ணிய துளியைப் பாருங்கள். சலன சக்தியுள்ள இந்த துளி ஓர் ஜல்லி போல் இருக்கிறது. அதிலுள்ள இந்தத் உயிரணு எத்தனை சக்தியைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது? இதுவே உயிர்ச் சக்தியைப் பிராணிகளில் பெரியனவற்றுக்கும் சிறியனவற்றுக்கும் பகிர்ந்தளிக்கிறது. நமது தாவர-மிருக -மானுட உலகின் உயிர்ச் சக்தி அவ்வளவும் இந்த நுண் துளிக்குள் அடக்கம். இதை 'இயற்கை' உண்டாக்கி யிருக்கவே முடியாது. - நெருப்பாக இருந்த பாறைகளில் இத்தனை உயிர்ப்புள்ள தாவரங்கள் ஓர் அறிவினால் ஏற்பட்டிராவிடில், கடலில் இத்தனை உப்பைக் கொட்டி அதைக் கார்ப்பாக்கி இல்லாவிடில் பிராணிகளின் வாழ்வே சாத்தியமில்லை. ஆமாம் கடலில் இத்தனை உப்பைக் கொட்டி வைத்தது யார்?*

***மூன்றாவது காரணம் :*** *மிருகங்களுக்குச் சுபாவமாக அமைந்துள்ள அறிவே, நல்ல மனம் கொண்ட ஒரு சிருஷ்டிகர்த்தன் அனாதரவான சின்னஞ்சிறு பூச்சிகளுக்கும் கூட தான் இவ்வறிவை - உள்ளுணர்ச்சியை ஊட்டியிருக்கிறான் என்பதை நிரூபிக்கிறது.*

*ஸாமன் என்பது மீன் இனத்தில் ஒரு வகை. அது ஏதோ ஒரு குட்டி நதியில் தோன்றுகிறது என்று வைத்துக் கொள்வோம். குட்டி நதியின் ஓட்டத்திலேயே அது சென்று ஒரு பெரிய நதியை அடைகிறது. பிறகு பெரிய நதியின் ஓட்டத்தோடு சென்று கடலை அடைகிறது. மாபெரும் கடலில் இச் சின்னஞ்சிறு மீன் வருஷக் கணக்கில் வாழ்கிறது. பிறகு ஒரு நாள் நாள் அது என்ன செய்கிறது தெரியுமா? கடலில் கலக்கும் அந்தப் பழைய பெரிய நதிக்குள் வந்து விடுகிறது. அந்தப் பெரிய நதியில் மைல் கணக்கில் பிரயாணம் செய்து சிறிதும் தப்பிதம் இன்றி, தான் பிறந்த அந்தக் குட்டி நதிக்கே திரும்பி விடுகிறது. மாகடலிலிருந்து அந்த அற்ப ஜந்துவை அத்துணைக் காலம் தள்ளி, அத்துணைத் தொலைவிலிருந்து, இம்மியும் பிசகின்றித் தன் பிறப்பிடத்துக்குக் கொண்டு வந்து சேர்க்கும் உள்ளறிவு எப்படித் தோன்றியது? அந்த மீனைத் தூக்கி நீங்கள் வேறேதும் உபநதியில் போட்டீர்கள் என்றால், அதற்கு நன்றாகத் தெரிகிறது, இதுவல்ல தன் பிறப்பிடம் என்று. அது அந்த உபநதியோடு சென்று மாநதியை அடைந்து பிறகு அந்த மாநதியில் திசையறிந்து எதிர் நீச்சுப் போட்டும் பிரயாணம் செய்து எங்கு தான் பிறந்த உபநதி கலக்கிறதோ அங்கு அதை அடையாளம் புரிந்து கொண்டு, தன் பிறப்பிடத்துக்கே போய் விடுகிறது.*

*ஈல்' என்ற மீன் வகையின் விந்தையோ அகஸ்மாத்தான 'இயற்கை' அமைப்பால் சற்றும் விளக்கவொண்ணாதது. உலகில் இந்த மீன் வகை எங்கு தோன்றினாலும் சரி, இலை அனைத்தும் வயது வந்தவுடன், அமெரிக்காவுக்கருகே உள்ள பெர்முடாவுக்கே வந்து விடுகின்றன. ஆயிரமாயிரம் மைல்கள் கடலில் நீந்தி இவ்விதம் பெர்முடாவின் அந்தந்த கடலுக்கு வந்து சேர்கின்றன ஐரோப்பிய ஈல்கள். அங்குதான் இனப் பெருக்கம் செய்து கொள்கின்றன. உடனே மரித்தும் விடுகின்றன. அவை ஈன்ற மீன் குஞ்சுகள் பச்சைக் குழந்தைகள் தாமே? ஆயினும் அவை பெற்றோரும் இறந்த பின், யாருமே வழி சொல்லிக் கொடுக்காமல் ஆயிரமாயிரம் காதமும் நீந்தித் தமது - தாய் வாழ்ந்த குட்டைக்கே வந்து சேர்கின்றன. இதனால் உலகில் அந்தந்தத் தேசங்களிலும் ஒரு குறிப்பிட்ட ஈல் இனத்தைத்தான் காண இயலுகிறது. இதுவரை அமெரிக்க நதியிலோ, ஏரியிலோ ஐரோப்பிய ஈலைப் பிடித்ததென்பது கிடையாது. அவ்வாறே ஐரோப்பிய நீர்நிலையில் அமெரிக்க ஈலைப் பிடித்ததென்பதும் கிடையாது. ஐரோப்பிய ஈல் பெர்முடாவுக்கு வர நீண்ட காலம் ஆகுமல்லவா அதற்கு மிகச் சரியாக அதன் கருக்கொள்ளும் காலமும் தள்ளிப் போடப்படுகிறது. இப்படி யெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்கின்ற இயக்க சக்தி ஒன்று இருந்துதானே தீர வேண்டும்?*

*(தொடரும்)*

# கௌசல்யா கவசம் 3

**ராமாயணம்**



ராமனிடத்தில் அளவு கடந்த அன்பு வைத்தவளான கௌசல்யை மனதில் சோகம் கொண்டவளாயிருந்தும் வெளியில் மகிழ்ச்சியுடன் இருப்பவளாய் காட்டிக் கொண்டு கலவரமற்று ஆசீர்வாதம் செய்தருளினாள்.

அவள் கோரிய பலனை அளிக்கவல்லதும் நன்மை தரவல்லதுமாகிய விசல்யகரணியெனும் மூலிகையை புஷ்பதூபாதிகளால் பூஜை செய்து மந்த்ரங்களால் ஜபித்தாள். தைவங்களுக்கு அர்ச்சனை செய்து மிஞ்சின புஷ்பங்களை திருமகனது சிரஸில் வைத்து ஸ்ரீராமருக்கு ரக்ஷாபந்தனம் செய்தாள்.


யஸஸ்வினியான அவள் அவரை கட்டி அனைத்து உச்சி மோந்து ''திருமகனே ராம உன்னிஷ்டப்படியே சித்தார்த்தனாய் போய் வருவாயாக'' என்றாள். குழந்தாய் உன்னை திடகாத்ரமுடையவனாய் எல்லாகர்யங்களும் கை கூடப்பெற்றவனாய் அயோத்திக்கு திரும்பி வந்து சேர்ந்தவனாய் ராஜபரிபாலனம் செய்பவனாய் நான் கண்குளிரக் கண்டு மகிழ்வேன். உதித்த பூர்ணசந்த்ரனை போன்ற உன்னை காட்டினின்று திரும்பி வந்து சேர்ந்தவனாய் சிந்தா வ்யாகூலம் அற்றவளாய், சந்தோஷத்தால் விளங்கும் முகமுடையவளாய் உன்னை நான் கண்குளிர கண்டு மகிழ்வேன்.

வத்ஸ ராம உன்னைத் தந்தையின் நியமனத்தை முடித்தவனாய் இங்கு வனவாசத்திலிருந்து வந்து சேர்ந்தவனாய் சிம்மாஸனத்தில் வீற்றிருப்பவனாய் கண்குளிரக் கண்டு மகிழ்வேன். ப்ரபுவே நீ வனவாசத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்தவனாய் மங்கல ஆபரணங்களுடன் விளங்குபவனாய் நித்யமாக

என்னுடையவும், மருமகளையுடையவும், மனோரதங்களை நிறைவு செய்வாயாக. ஸ்ரீ ராம என்னால் தொழுது ப்ரார்த்திக்கப்பட்ட சிவபெருமான் முதலிய தேவ கணங்களும் மஹர்ஷிகளும், பூதர்களும் நாகர்களும் பத்து திக்குகளும், வெகு காலம் காட்டில் வசிக்கப்போகும் உனக்கு நலங்களை செய்யட்டும்.

கண்ணீர் நிறைந்த கண்களுடன் அவள் மேற்சொன்னபடி முறைப்படி ஸ்வஸ்தி அயனைத்தையும் செய்து முடித்தபின் மங்கள ஸூத்ரத்தையும் கட்டினாள். இன்னும் ஸ்ரீராமரை பல முறை கட்டி அணைத்துக்கொண்டாள். தன் தாயால் இப்படி சொல்லப்பட்ட ஸ்ரீராமர் அவளை வணங்கி தன் காந்தியாலே விளங்குபவரான அவர் ஸீதையின் மாளிகைக்கு எழுந்தருளினார்.

முற்றும்



நம்முடைய வாழ்முறையைப் பாழ்படுத்தி வந்த வெள்ளைக்காரர்கள் நடத்தி வந்த கல்வி திட்டம் ஸ்வராஜ்யம் வந்த பின் மாற வேண்டும் என்று ஆசைப்பட்டோம். மாறவும் மாறிற்று. முன்னை விட மோசமான கல்வி முறையாக இதில் கல்வியும் இல்லை; முறையும் இல்லை. ஏன் மூளைக்காவது சரக்கு ஏற்றுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. யோக்யதாம்சம் என்பதைப் பின்னுக்குத் தள்ளி ஜாதி, பணபலம், மிரட்டல் என்கிறவற்றை வைத்து கல்வி, பட்டம் என்றால் வேறே எப்படி ருக்கும்?

டொனேஷன் கொடுத்து அட்மிஷன் பெறுவது, லஞ்சம் கொடுத்து பாஸ் போடப் பண்ணுவது, வோட்டை பற்றியே யோஜனை பண்ணிக் கொண்டு நாளுக்கு நாள் ஜாஸ்தி யாக்கிக் கொண்டிருக்கும் ரிஸர்வேஷன் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும் போது இந்த தேசத்தில் தர்ம நியாயமான கல்வி முறை நடக்கிறதா, நடக்குமா என்பது கேள்வியாயிருக்கிறது.

காஞ்சி மஹா பெரியவர்

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

## விபரீத விருந்தோம்பல்



பௌராணிகர் நம்முடைய புராண இலக்கியங்கள் யாவும் தாத்பர்யம் உடையவை. கதைகள் எப்படி இருப்பினும் அவைகளின் தாத்பர்யம் தான் முக்யம்'' என்றார். எப்படி விளக்குங்கள் என்று சிஷ்யன் கேட்க அவர் கூறலானார்.

இக்கதை நந்தினரால் ஸனத்குமாரருக்கும், அது லோமஹர்ஷணரால் முனிவர்களுக்கும் சொல்லப்பட்டது. ஒரு சமயம் பல ரிஷிகள் மோக்ஷமெய்த கடுமையான தவம் மேற்கொண்டனர். இது மட்டுமே போறும் என்று அதிலேயே ஊறினவர்களாய் இருந்தனர். ருத்ரர் அவர்களது தவத்தை மெச்சினாலும் அவர்களது பாதை சரி அல்ல என்பதைக் காட்ட வக்ரங்களுடன் கூடிய ரூபத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் இருப்பிடம் வந்தார்.

வக்ரமாயிருந்தாலும் வசீகரனாயிர்ந்தார். முனிவர்களுடன் சம்பாஷிக்கையில் அவர் மனைவிகள் அவருடைய வசீகரத்தைப் பார்த்து மோகித்து ரிஷிகள் முன்னிலையிலேயே மதி மயங்கி நடக்க ஆரம்பித்தனர். கோபம் கொண்ட முனிவர்கள் ருத்ரரை கண்டபடி வைய்ய மனமுடைந்த அவர் அங்கிருந்து மறைந்தார். என்ன நடக்கிறது என்று புரியாத முனிவர்கள் ப்ரம்மாவிடம் போய் முறையிட்டனர். உண்மையை உணர்ந்த ப்ரம்மாவும் அவர்களிடம் ''இவ்வளவு தவம் செய்தும் வந்தது ஈஸ்வரன் என்று உணரவில்லை.

மேலும் வந்திருப்பவருக்கு அதிதி ஸத்காரம் செய்யவில்லை. எப்பேர்பட்டவனாயிருப்பினும் அதிதி போற்றபட வேண்டியவனே. இனியமொழியும், நீரும் இருக்க இடம் கொடுப்பது பண்பாளர்களின் கடமையல்லவா. நீங்கள் இதிலிருந்து தவறிவிட்டீர்கள். இதுவே காரணம்'' என்று கூறி இக்கதையைக் கேளுங்கள் என்றார்.

கங்கை நதிக்கரையில் சுதர்சன் என்பவன் தன் மனைவியுடன் தூய வாழ்க்கை வாழ்ந்து வந்தான். மிகச்சிறந்த சிவபக்தனாக இருந்தான். விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கினான். மரணத்தை வெல்ல சிவபூஜை தவறாமல் செய்து வந்தான். அவன் மனைவியிடம் இப்படி கூறுவது வழக்கம்.

எப்போதும் சிவபூஜை செய். விருந்தோம்பலையும் விடாதே. நம் ஐஸ்வர்யம் எல்லாம் சிவன் சொத்து. எனவே விருந்தினர் என்ன கேட்டாலும் தந்துவிடு. உன்னையே கேட்டாலும் தந்துவிடு''

அவள் இதை கேட்கும்போதெல்லாம் தர்ம சங்கடத்தில் ஆழ்வாள். ஒரு நாள் அவன் வெளியே போயிருக்கும் போது தர்மதேவன் சோதிக்க எண்ணி அவன் இல்லம் வந்தாள். அவன் மனைவி தந்த உபசாரங்களை ஸ்வீகரித்த பின் அவளை காமத்துடன் அணுகி அதற்கு அவளை ஒப்புதல் கேட்டான். அதிர்ச்சியில் உறைந்த அவள் தன் கணவன் சொன்னதை மீறமுடியாமல் தயக்கத்துடன் படுக்கை அறைக்கு நுழைந்தாள். அப்போது அங்கு வந்த கணவன் உள்ளே வேறு ஆடவன் பேசுவதை கேட்டும் மனம் தளறாமல் வெளியே போக எத்தனித்தான். அப்போது தர்ம தேவன் அவன் முன் தோன்றி எந்த விபரீதத்திற்காக கொலை நடக்குமோ என்று எண்ணிய விஷயம்.

உன் கண்முன்னால் நடந்திருப்பினும் பொறுமை காத்ததற்கு நன்றி. இது விருந்தோம்பலின் உச்ச கட்டம் . நான் தர்ம தேவன். உன் மனைவியை மனதாலும் தொடவில்லை. நான் வைத்த பரீக்ஷையில் ஜெயித்து விட்டீர்கள். நீ நினைத்தது நிறைவேறும்''என்று கூறி மறைந்தான். இக்கதையின் தாத்பர்யத்தை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பௌராணிகர் மீண்டும் கூறினார்.

சிவபுராணம்

ஸனாதன தமப்புதிர்கள் நவம்பர் விடைகள்

| | |
|---|---|
| 1. நீல விடங்கர் | 6. ஸ்வாமி சிவானந்தர் |
| 2. மாணிக்கம் மரகதம் முத்து | 7. பண்டரீபுரம் |
| 3. நாகரம் வேசரம் த்ராவிடம் | 8. ஸப்த மாத்ருக்கள் |
| 4. மைலாப்பூர் சாந்தோம் | 9. இளையாத்தகுடி |
| 5. குபேரன் | 10 ஸூர்யன் சந்த்ரன் ,அக்னி |

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

## அத்யாஸ அபவாதம் 4

A ì ª ß ÁõU÷¯ }»•z£»ªv ÁõU¯Áz Aº÷uõ | é [Pa\÷u 155

*தத்வமஸி வாக்யம் நீலனுதபலம் போல் பொருள் தராது.*

uzµ x }»£uõºu }»S n ì ¯ Ez£»£uõº÷uõ Ez£»zµÆ¯ ì ¯
\ ö\ Í UÀ¯£hõv÷£uÆ¯õÁºuPu¯õ A ß÷¯õ ß¯ Â÷\ å n
Â÷\ è ¯ ¹£ é®éºP ì ¯ A ß¯uµ Â æ è h ì ¯ A ß¯uµ ì ¯
u ø uU¯ ì ¯ Áõ ÁõU¯ºuz Áõu [RPõ÷µ ¨µ©õ n õ¢uµ Â÷µõuõ
£Áõz uz ÁU¯õµu: é [Pa\÷u »

*நீலத்தாமரை என்னும் பதத்தில் நீலம் வண்ணத்தையும் தாமரை மலையும் குறிக்கும். மற்ற வண்ணனகளைத் தள்ளி நீலமாயிருக்கும். மற்ற வஸ்துக்களைத் தள்ளி தாமரையாயிருக்கும்.இரண்டு பதங்களும் ஒன்றையொன்று ஆஸ்ரயித்துள்ளன. தாமரைக்கு நீலம் குணமாயுள்ளது. இப்படி வாக்யத்தைப் பார்த்தால் தத்வமஸி வாக்யமும் இப்படியே சொல்லலாம்.*

A zµ x uz£uõºu£÷µõ ñ zÁõz A Â ] è h ø\uß¯ ì ¯ zÁ® £uõºu
£÷µõ ñ zÁõz A Â ] è h ø\uß¯ ì ¯ \ A ß÷¯õß¯ ÷£uÆ¯õÁºu
Pu¯õ Â÷é å n Â÷\ è¯ £õÁ é®éºP ì ¯ A ß¯uµÂ ] è h ì ¯
A ß¯uµ ì ¯ u ø uP ì ¯ Áõ ÁõU¯õºuz Áõ A [RPõ÷µ ¨µz¯ ñ õv
¨µ©õ n Â÷µõuÁõU¯õº÷uõ | é [Pa\÷u ›› 156

*பரோக்ஷமாயிருக்கும் தத் பதத்தால் குறிக்கப்படும் சைத்ன்யமும் அபரோக்ஷமாயிருக்கும் த்வம் பதத்தால் குறிக்கப்படும் சைதன்யமும் நீலமுத்பலம் போல் ஒன்றையொன்று ஆஸ்ரயிக்கவில்லை. மேலும் ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமாகும். எனவே இது சரியில்லை.*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

**பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா**



*சகுனியின் தந்த்ரத்தால் ஜயிக்கப்பட்ட பாண்டவர்களைப் பார்த்து சபையினர் துயரமுற்றனர். சீ சீ என்ன செய்கை என்று இகழ்ந்தனர்.*

*தோற்றுப்போன பாண்டவர்கள் ஒப்பந்தப்படி மாந்தோல் உடுத்தி வனவாசத்திற்குப் புறப்பட்டனர். அவர்களைப்பார்த்து துச்சாசனன் சொல்வான்.*

*''துர்யோதனனின் ஆஞ்யா சக்ரம் ஆரம்பித்து விட்டது. ஒடுக்கப்பட்டவர்களாக பாண்டவர்கள் வனம் செல்கின்றனர். த்ருபத ராஜாவைப் பார்த்து நான் வெட்கபப்டுகிறேன். த்ரௌபதியைக் காக்கத் தவறின அலிகளுக்கு அவளை மணம் முடித்தான். வெட்கம். பாஞ்சாலி வஸ்த்ரமில்லாமல் தோலாடையுடுத்திய பாண்டவர்களுடன் என்ன செய்ய போகிறாய்?உனக்கு விருப்பமிருந்தால் இங்கிருக்கும் யாரேனையும் தேர்ந்தெடு.''*

*பீமன் துஷ்ட துச்சாசனனே சகுனியின் தந்த்ரத்தால் வென்று விட்டாய். அதனால் தான் இப்படி பேசுகிறாய். சொல்லம்புகளால் எங்களை துளைத்த உன்னை யுத்த களத்தில் அம்புகளால் மாய்ப்பேன். ந்ருசம்சனே வஞ்சகத்தால் அடைந்த தனத்தால் கொக்கரிக்கிறாய். எல்லாரும் பார்த்துக் கொண்டேயிருக்கும்போதே ரணகளத்தில் த்ருத்ராஷ்ட்டிரனின் அனைத்துப் புதல்வர்களையும் மாய்ப்பேன். சாந்தி அடைவேன். துர்யோதனை நான் கொல்வேன், கர்ணனை அர்ஜுனன் கொல்வான். சகுனியை சஹதேவன் கொல்வான். துராத்மாவான துயோதனனை கதையால் கொன்று அவன் தலை மீது என் காலை வைப்பேன். துச்சாதனின் உதிரத்தைக் குடிப்பேன்.*

*அர்ஜுனன் வெறும் வார்த்தைகளால் பேசவேண்டாம் அண்ணா பதினாங்கு வருடங்களுக்குப் பின் நீங்கள் சொன்னதைக் காண்பர்.*

பின்பு தர்மர் ஆசார்யகள், அரசன் குந்தி காந்தாரி அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார். மக்கள் அனைவரும் ஆங்காங்கே கூடி நின்று அரசனை நிந்தித்தனர். கௌரவர்களால் ஆளப்போகப்படும் இந்த ராஜ்யம் நமக்கு வேண்டாம். தர்மர் எங்கு இருக்கிறாரோ அதுவே நம் வாசம், காற்றும், ஆதவனும் பார்க்காத இந்த பாஞ்ஜாலியை எல்லாரும் பார்க்க நேரிட்டதே. ஆ ஆ என்ன கஷ்டம்.இந்த வார்த்தைகளை எல்லாம் கேட்டுக் கொண்டு பாண்டவர்கள் மௌனமாக வனம் ஏகினர்.

த்ருத்ராஷ்ட்ரன் எது நடக்ககூடாதோ அது நடந்துவிட்டது. சஞ்சயனே த்ரௌபதியின் துயரமுற்ற கண்களினால் பூமியே எரிக்கப்படும். என் புத்ரர்கள் யாரேனும் மிச்சமிருப்பர்களா? பாண்டவர்களோடு ஸ்னேகமே சிறந்தது. விதுரன் சொன்னதை புத்ரவாஞ்சையால் கேட்காது போனேன்.''என்று புலம்பினான்.

ஸபாபர்வம் முற்றும்



■ பல விதமான வளர்ச்சிகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவுக்கு வரவேண்டிய வளர்ச்சி, இன்னும் வரவேண்டிய நிலையிலே இருக்கிறது. அந்த வளரும் நாடு என்கிற இடத்தை பிடிப்பதற்கே, தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டிய நிலையிலே இந்தியா என்பது இருந்து கொண்டிருக்கிறது.

■ இந்தியா பல நல்ல காரியங்களையும் செய்து வருகிறது. அதற்குரிய பெயரும், அங்கீகாரமும் உலக அரங்கிலே கெடைக்கறதோ, கெடைக்கலயோ, ஆனால் செய்து வருகிறது.

■ இந்தியாவை பொறுத்த வகையிலே பணம் சம்பாதிப்பது என்று ஒன்று இருந்தாலும், பணம் சம்பாதிப்பதோடு சேர்ந்து இத்தனை குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை கொடுத்தோம் என்பதும், ஒரு தார்மீக சிந்தனையாக, இந்தியாவினுடைய மண்ணுக்குரிய வாஸனயாக, அது இருந்து கொண்டு வருகிறது.

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

**வினா :- மோக்ஷம் புதிதாகத் தோன்றும் ஒற்றுமை என்று கூறுவதில் இன்னும் ஏதாவது குற்றம் உண்டா ?**

**விடை:-** உலகில் புதிதாக உற்பத்தியாகும் எத்தனையோ காரியங்களைப்போல், முத்தியும் ஒரு காரியப்பொருள் என்று ஏற்பட்டுவிடும்.

**வினா :- முத்தியை உற்பத்தியுடைய ஒரு காரியப் பொன் என்று கொண்டால் என்ன?**

**விடை :-** உண்டாகும் காரியப்பொருளெல்லாம் அழிந்த தீரும்.' ஆதலால் இம்முத்தியும் அழிந்துவிடும். அழியக்கூடியதை முத்தி யென்று யாரும் விரும்பார். எனவே, முத்தி யென்பதே சித்திக்காது.

**வினா :- முத்தியை உயர்ந்த உலகில் ஏற்படும் ஒரு வாஸமாகவோ, அல்லது தனது ஆத்ம ஸ்வரூபத்தைத் தவிர வேறான ஓர் இன்பமாகவோ கொண்டால் என்ன குற்றம்?**

**விடை :-**ஐம்புலன்களாலோ அல்லது உள்ளத்தாலோ தன்னினும் வேறாக அனுபவிக்கப்படும் காட்சிப்பொருள்கள் முதலியவையும் இன்பங்களும் அழிவனவே யாகும், அவ்வகை பொருளாய்க் கொண்டால், முத்தியும் அழிய நேரும். ஆதலால் ஜீவனென்னும் அறிவுப்பொருளே உண்மையில் பரிபூரண அகண்ட-பரமாத்ம வடிவாக எக்காலத்தும் இருப்பினும் மாயையென்னும் அநாதிப் பொய்த் திரையால் மூடப்பட்டுத் தான் வேறுபட்டவனென்ற பொய் யெண்ணத்தோடிருக்க, மாயா தீதமான திருவருள் கூடும் பொழுது, ஞானக்கதிரவன் உதயமாக அம்மாயையென்னும் இருட்டலம் ஒழிய, தனக்கென்றுமுள்ள நான் பூர்ணானந்தத் தன்மையையே அடைகின்றது. அதுவே முத்தியாகும்.. அதுவே சிவம். அதுவே வேதப்பொருள். அது உற்பத்தியாவது மன்று; தன்னைத் தவிர வேறான காட்சி பொருளுமன்று; வேறான இன்பப்பொருளுமன்று.

**வினா:--பரமாத்மாவுக்குப் பூர்ணத் தன்மை உண்டென்று கூறிவிட்டு, அவனைத் தவிர வேறுபட்ட ஜீவன் என்னும் பொருள் இருப்பது அப்பூரணத்திற்குக் குறைவை ஏற்படுத்துமல்லவா?**

விடை:-ஆம். பரமாத்மாவைத் தவிர வேறுபட்ட பொருள் இருப்பதாகக் கூறுவது, பரமாத்மாவின் பூர்ணத்தன்மைக்குக் குறைவு தான்.. நானென்னு மகங்காரத்தையே

அப்பூரணத்தில் கரைத்துவிட்டாலல்லாது, பூர்ணத்தன்மை பூர்ணமாகாது. பரமாத்மாவல்லாத பொருளைப் பரமாத்மாவிலே கரைத்தால், அது கரைந்தாலும் வேறு வேறே. பனிக்கட்டியை ஜலத்தில் கரைத்தால், பூர்ணமாய் ஜலமாகிவிடும். ஜலமும் பூர்ணமாகிவிடும். கரைதலுக்கு முன்னமே இரண்டும் ஒன்றே. கரைந்த பின்னரும் ஒன்றே ஜலத்தைத் தவிர வேறான உப்பையோ, சர்க்கரையையோ கரைத்தால், கரைதலும் பூர்ணமாகாது ; ஜலமும் பூர்ணமாகாது. ‘ ஓடும் ஆறுகள் கடலையடைந்ததும், அவற்றின் பெயரும் உருவும் நீங்கி அவை மறைகின்றன. அவ் வாறே பரம்பொருளை யறிந்தவன் பெயருருவங்களை விட்டு மேலான பரம்பொருளை யடைகிறான்'' என்று வேதங் கூறுகிறது. இதற்கு மற்றொரு காரணமும் கூறலாம்.

பிறவியிலிருந்து ஆடுகளின் கூட்டத்தில் வளர்ந்த புலி ’ தான் புலியில்லை ஆடு ’ என்று நினைப்பது போல பிரும்மத்தினின்றும் தான் வேறுபட்டவனென்று எண்ணும் வேற்றுமைத் தோற்றம் அஞ்ஞான மயக்கமே.’

இந்த ’ ஆறு-கடல்’ உதாரணத்தாலும், ஆடு வளர்த்த புலி உதாரணத்தாலும், சீவனுக்கும் பரம்பொருளுக்கும் இயற்கையிலேயே பேதமில்லையென்பதும், தோன்றும் பேதம் ’ உபாதி’ யென்னும் வரையறையால் ஏற்பட்டது என்பதும் தெரிகின்றன.

**வினா:- உபாதி’ யென்றால் என்ன?**

**விடை:-** கடல்நீர் சூரியகிரணங்களால் இழுக்கப்பட்டு, வானத்தையடைகிறது. அப்பொழுது, அது ’கார்’ என்ற பெயரைப் பெறுகிறது. அதுவே வானத்தினின்று விடுபட்டதும் ‘நீர்‘ என்ற பெயரைப் பெறுகிறது. இப்படி ஒரே பொருள் பல இடங்களுக்குத் தக்கபடி பல பெயர்களைப் பெறுவதற்குக் காரணமாயிருக்கும் வானம், மலை முதலியவற்றை உபாதி’ யென்று சொல்லவாம்.

**வினா :- இந்த உபாதி திருஷ்டாந்தத்தால் கிடைத்தது என்ன?**

**விடை :-** ஒரே நீருக்குப் பல பெயர்கள் வருவது உபாதியாலே தான் ; வேறு வேற்றுமை யில்லை. உண்மையில் எல்லாம் ஒரே நீர் தான். அதேபோல சிவனுக்கும் பரம்பொருளுக்கும் வேறுபாடில்லை. இதைத் தான் மேற்கூறிய வேத வாக்கியம் நன்கு தெரிவிக்கிறது.

(தொடரும்)

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

**பாகம்-2**

ÿ |õµõ¯ nwºzu¸® AÁº A¸ Îaö\´u
ÿ Q¸ è n½»õ uµ[Qo ²®

*1. ஸ்ரீ தீர்த்தர் கீத கோவிந்தத்தை இயற்றிய ஸ்ரீஜயதேவரின் அவதாரம் என்று கூறப்படுகிறது.*

*2. வராஹபுரி பெருமாள் யாராலும் பிரிக்க முடியாதவாறு ஆதரவாகப் பிராட்டியை அணைத்தவாறும், பிராட்டியும் பெருமாளை அவரைவிட்டு பிரியாமல் அன்பு பெருக்கெடுத்து ஆரத்தழுவியுள்ளார். இக்காட்சியை தினமும் பார்த்ததாலும் ஒவ்வொரு தரங்கிணிப்பாடலையும், சலங்கை ஒலி ஸப்திக்கச் செய்தும் 'கோபாலமேவ தைவதம்' பாடும் போது ஸ்ரீதீர்த்தருக்கு திவ்ய திருஷ்டியைக் கொடுத்து தன் தேவியுடன் காட்சி கொடுத்தும், கிருஷ்ணராதையே - ஜீவாத்மா பரமாத்ம ஐக்கியருபமாக - என்று அவர் மனக்கண் முன் தோன்றியதாலும் அவர் ராதாகிருஷ்ணனை பற்றி எழுதியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.*

*61.பத்ம புராணத்தில் உள்ள ஸ்ரீமத் பாகவத மஹாத்மியத்தில் கூறப்பட்டுள்ளதை நாம் சிறிது பார்க்கலாம் சுகருடைய வாயிலிருந்து வெளிப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தின் கதாம்ருதத்தின் பலன் அளவிட முடியாது. கங்கை, கயா காசி, புஷ்கரம் , ப்ரயாகை அளிக்கும் பலன்கள்யாவையும் இந்த பாகவத பலன்களுக்குச் சமமாகாது என்று கூறப்பட்டுள்ளது. (அத் 3. ஸ்லோ.32) இந்தப் பெருமையும், புகழும் ஸ்ரீமத்பாகவதத்தை அனுஸரித்தே ஸ்ரீதீர்த்தரின் வாயிலிருந்து வெளிப்பட்ட கதாம்ருதமான ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணிக்கும் பொருந்தும் என்று சொல்லவும் வேண்டுமோ?*

*62. ஸ்ரீ தீர்த்தர் 12 தரங்கம் - 'காமதா காமினாமேஷா' - எனத்தொடங்கும் ஸ்லோ 161ல் இந்த ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணி என்ற சிறந்த பக்தி நூலை பக்தியுடன் பாடுகிறவர்களுக்கும், கேட்பவர்களுக்கும், அவரவர்களின் விருப்பம் போல, அறம், பொருள் இன்பம், வீடு இவற்றை இந்த நூல் அளிக்கிறது என்று பலஸ்ருதியும் கூறிவிட்டார்.*

*63.ஸ்ரீ தீர்த்தரின் நாமாவை உச்சரிப்பதாலேயே நம் பாவங்கள் தொலைந்து அக்ஞான இருள் நீங்கி ஆத்மஞானத்தை அடைந்து பரமானந்தத்தை அடையலாம் என்பதில் ஒரு ஐயமே இல்லை. ஸ்ரீநாராயண தீர்த்தரின் திருநாமத்தை ஒருமுறை கூறுவது லக்ஷம்*

தடவைகள் ஓங்காரத்தை ஜபிப்பதால் கிட்டும் புண்ணியத்தைக்காட்டிலும் அதிக புண்ணியத்தை அளிப்பதாகும். அவரின் திருவுருவத்தை வழிபடுவது ப்ரஹ்மா, சிவன் நாராயணன், இவர்களை வழிபடுவதால் கிட்டும் பலனுக்கு ஸமமான பலனைத்தரும் என்று குரு த்யான ஸ்லோகத்தில் சொல்லப்பட்டதில் எவ்வளவு அர்த்தம் பொதிந்துள்ளது எனபது தெள்ளத் தெளிவாகிறது. மேலும் அவ்வரிகள் அனுபவ பூர்வமாகவே வந்ததில் என்ன சந்தேகம் அத்தகைய மஹான் ஸ்ரீநாராயண தீர்த்தரின் திருவடித்தாமரைகளை வணங்கி நமக்கும் தூய்மையான உள்ளத்தையளித்து பரமாத்ம அநுபவம் ஏற்பட்டு ஆனந்த ஸ்வரூபியான பரம்பொருளுடன் ஐக்யமாகிற மோக்ஷத்தைப் பெறுவோமாக.

## பாகம்-3

## ஒற்றுமையும் வேற்றுமையும்

1. ஸ்ரீஜயதேவரின் கீதகோவிந்தம் சிருங்கார ரஸம் இழைந்த பக்திரஸம் ததும்பும் இனிமையான பாடல்களைக் கொண்டது. ஸ்ரீ நாராயண தீர்த்தரின் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணி பக்தி ரஸத்துடன் ஆத்மஞானத்தை போதிக்கும் இனிமையான தெய்வீகப்பாடல்களைக் கொண்டது.

2. இந்த இரண்டு நூல்களுக்கும் பாட்டுடைத்தலைவன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே. ஸ்ரீமத்பாகவதத்திற்கும் பாட்டுடைத்தலைவன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே

3. ஸ்ரீஜயதேவரின் கீதகோவிந்தம் 12 ஸர்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது, ஸ்ரீநாராயண தீர்த்தரின் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியும் 12 தரங்கிணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமத்பாகவதமும் 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது,

4.ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் த்வாதஸாக்ஷரி மந்திரம் 12 அக்ஷரங்களைக் கொண்டது. ஒவ்வொரு ஸ்கந்தம் ஆரம்பிக்கும் போது வியாசர், இந்த மூல மந்திரத்தை ஸ்மரித்தே தொடங்குகிறார் என்பது குறிப்பிடதக்கது. துருவ சரித்திரத்தில் ஸ்ரீநாரத மஹரிஷி, துருவனுக்கு இந்த மூல மந்திரத்தை உபதேஸிப்பதாக ஸ்ரீமத்பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. ( பாக ஸ்க 4 அத்யா.8-ஸ்லோ 54). மிகவும் சக்தி வாய்ந்த இந்த மந்திர அக்ஷரங்களின் எண்ணிக்கை 12 ஆனதால், ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களான ஸ்ரீஜயதேவரும், ஸ்ரீநாராயண தீர்த்தரும் ஸ்ரீமத்பாகவதத்தை அனுசரித்து தத்தம் நூல்களை 12 பாகமாக பிரித்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.

5. ஸ்ரீஜயதேவர், சிருங்கார ரஸம் ப்ரதானமாக உள்ள இந்த நூலை 18புராணங்களில் ஒன்றான ப்ரஹ்மவைவர்த்த புராணத்தின் ராதாகிருஷ்ண சரித்திரத்தின் அடிப்படையில் படைத்தருளினார்.ஸ்ரீநாராயண தீர்த்தர் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியை, ஸ்லோகங்கள்

சூர்ணிகைகள், கீதங்கள் எல்லாவற்றையும் ஸ்ரீமத்பாகவதத்தை அனுசரித்து தஸம் ஸ்கந்தம் ருக்மிணி விவாஹம் வரையில் படைத்தருளினார். ஸ்ரீமத்பாகவதத்தில் ராதை என்ற கதாபாத்திரத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் மொத்தமாக கோபிகைகள் என்றே ஸ்ரீவியாஸாசாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் ஸ்ரீதீர்த்தர் 8வது தரங்கத்தில் கிருஷ்ண ராதை சம்பாஷணை பிரிவாற்றல் , பிணக்கு ஆகியவைகளை விவரித்துள்ளார். இது ஒரு சிறிய வேறுபாடு ஆகும். எனினும் இந்நூலின் இப்பகுதி, ஆத்மஞானத்தை போதிப்பதால் சிறந்து விளங்குகிறது.

6.மேலும் ஸ்ரீநாராயணதீர்த்தர் தத்வங்கள் அடங்கிய பாகவதம் ஏகாதஸ ஸ்கந்தம் பற்றி எழுதாமல் விட்டுவிட்டாரே என ஏக்கப்பட வைக்காமல் ஸ்ரீதீர்த்தர் வேதங்கள், உபநிஷத்துக்கள், ஸாஸ்த்திரங்கள் இவைகளின் ஸாரத்தை ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியிலேயே சந்தர்பத்துக்கு ஏற்றவாறு புகுத்தி, தனக்கே உரித்தான எளிய நடையில், அருளிச் செய்தார் என்பது இந்நூலின் தனிச்சிறப்பு...

7.ஸ்ரீஜயதேவர், ஸ்ரீநாராயண தீர்த்தர் இருவருமே சங்கீதம் நாட்டிய கலைகளில் பாண்டித்யம் பெற்று இருந்ததனால், எல்லாப் பாடல்களையும் பல ராகங்களிலும், தாளங்களிலும், நடனமாடக்கூடிய வகையில் அமைத்து மெருகு ஊட்டியுள்ளனர். ஸ்ரீநாராயண தீர்த்தர் ஒருபடி மேலே போய் நாட்டிய ஜதிகளையும் அனைவரும் வியக்கும் வண்ணம் கையாண்டிருப்பது அவரின் புலமையை நன்கு பறை சாற்றுகிறது.

8. இவ்விரண்டு நூல்களுமே, ஆத்ம ஞானம் பெற்று பரமாத்ம ஐக்கியத்தில் ஈடுபட்டு ப்ரஹமானந்தத்தில் திளைத்த ஸ்ரீஜயதேவர், ஸ்ரீநாராயண தீர்த்தர் ஆகிய ப்ரஹ்மநிஷ்டர்களால் ஸ்வானுபவத்தில் எழுதப்பெற்றதால், அவர்களின் பாடல்களில் பக்திரஸம் சொட்டுகிறது. எனவே இப்பாடல்களை நாம் பாடும் போதும், மற்றவர்கள் பாடிக்கேட்கும் போதும் மெய்மறந்து பரமானந்தத்தில் திளைத்து கண்ணீர் மல்கி பரவசமாகிறோம். இப்படி ப்ரேம் பக்தியில் முழ்கிய உறுதியான பக்தன் தனக்குப் பிரியமான பகவன் நாம் கீர்த்தனைகளைப் பாடும்போது மனமுருகி உலக விவஹாரங்களை அறவே மறந்து பித்தன் போல உரக்கச் சிரிப்பான், சில சமயம் அழுவான் உறக்க கூச்சலிடுவான், பாடுவான், ஆடுவான் என்று நவயோகிகளில் ஒருவரான கவியோகி, விதேஹ ராஜாவிற்கு பக்தனின் லக்ஷணத்தை தெரிவிக்கிறார். ஸ்ரீமத் பாகவதம் ஸ்க. 11அத்யா 2 ஸ்லோகம் 40 இம்மாதிரி, ஸ்ரீ ஜயதேவர், ஸ்ரீ நாராயணதீர்த்தர் எழுதிய பாடல்கள், மேலே கூறியவாறு ச்ரேஷ்ட பக்தர்களை உருவாக்குகிறது என்று சொன்னால் மிகையாகாது.

(தொடரும்)

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

**89. கேள்வி : நையாயிகர்கள் யாகம் முடிந்தவுடன் பலன் எப்படி கிடைக்கும் என்கிறார்களே?**

பதில் : வேதம் ஸ்வர்கத்திற்காக யாகம் செய் என்கிறது. மீமாம்சகர்களும், இதை உறுதிப்படுத்துகின்றனர். யாகம் முடிந்தாலும் ஸூக்ஷ்ம சக்தியினால் அதன் பலன் கிடைக்கும். உப்புத் தன்னை அழித்துக் கொண்டாலும் நீரில் ஸூக்ஷ்மமாக இருந்து சுவை தருவது போல.

90. **கேள்வி :** தர்மம் இது என்று எப்படி நிர்ணயமாகும்?

பதில் : தர்மத்திற்கு நாலு ப்ரமாணங்கள் 1. வேதம், 2. ஸ்ம்ருதி, 3. ஸதாசாரம், 4. மனத்தெளிவு.

91. **கேள்வி :** வேதம் போன்றே ஸ்ம்ருதிகள், புராணங்கள் ப்ரமாணம் ஆகுமா ?

பதில் : வேதத்திற்கு விரோதமாக அவையிருந்தால் ப்ரமாணமாகா.

92. **கேள்வி :** வேதம் ஒன்று தான் ப்ரமாணமெனின் இவைகளின் அவஸ்யமென்ன ?

பதில் : வேதங்களில் பல சாகைகள் காலப்போக்கில் மறைந்து விட்டபடியால் ரிஷிகள் தம் நினவாற்றலினால் ஸ்ம்ருதிகள் செய்தனர்.

93. **கேள்வி :** தர்ம நிர்ணயத்திற்குப் ப்ரமாணம் எது?

பதில் : ''வேதோ அகில தர்ம மூலம் வேத: ஸ்ம்ருதி; ஸதாசார;'' தர்ம ஜிஞ்க்யாஸமானானாம் ப்ரமாணம் ஸ்ருதி : இப்படி வேதமே தர்ம நிர்ணயமாகும்.

94. **கேள்வி :** வேதத்தைப் போன்று ஸ்ம்ருதிகள் புராணங்கள் ப்ரமாணமாகுமா?

வேதம் ஒன்றே ப்ரமாணமாகும். வேதத்திற்கு விரோதமாக புராணத்திலோ ஸ்ம்ருதியிலோ சொல்லப்பட்டிருந்தால் ப்ரமாணமாகாது.

95. **கேள்வி :** அப்படியாயின் ஸ்ம்ருதிகள் புராணங்கள் இவைகளின் அவஸ்யமென்ன?

பதில் : ஸ்ம்ருதிகள் ரிஷிகளின் ஞாபகக் குறிப்புகள். முரண்படும் பக்ஷத்தில் வேதமே ஏற்கத் தகுந்தது.

96. **கேள்வி :** இவைகளும் முக்யமெனின் வேதத்தின் அவஸ்யமென்ன?

பதில் : ஸ்ம்ருதி, புராணங்கள் எல்லாவற்றிற்கும் வேர் வேதமே. வேறின்றி மரம், கிளை, இலை, பூ, காய், கனி இவை இல்லை.

97. **கேள்வி :** மனு தர்மத்திற்குப் ப்ரமாணமாக ஸதாசாரத்தைக் கூறுகிறார் ?

பதில் : குல ஆசாரத்தையும் கூறுகிறார். வங்காளத்தில் ப்ராம்மணர்கள் மீன் உண்பர். புராணங்களில் பாஞ்சாலி ஐந்து கணவர்களை மணந்தது. ராமர் மனைவியைத் துறந்தது. பரசுராமர் தாயைக் கொன்றது இவைகளை ஏற்க வேண்டுமே? ஸதாசாரமாக குலாசாரம் இருக்க வேண்டும். அவதார புருஷர்களின் செயல்களில் விதி மீறல் இருக்கலாம் . அதுவே விதி அல்ல. Exception is not the rule. புராணக் கதைகளிலிருந்து அவைகளின் தாத்பர்யத்தைத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

98. **கேள்வி :** தர்மத்தையும், மேலுலகத்தையும் ஏன் மதிக்க வேண்டும் ?

பதில் : இவைகளை மதிக்கவில்லையெனில் உண்மை பேசுதல், பரோபகாரம் ஆகியவை அற்றுப் போகும். மேலுலக பயமில்லையெனில் திருடுதல், பிறர் மனை நயத்தல், வக்ர காம உறவுகள் ஏற்படும். தாய், தந்தை, குரு என்னும் மதிப்பு இல்லாமல் போகும். எல்லா அறச் செயல்களும் அழியும்.

99. **கேள்வி :** பரலோகமோ, தர்மமோ கண்ணுக்குத் தெரியவில்லை அதனை ஏன் மதிக்க வேண்டும்?

பதில் : பரலோகம் இல்லையென வைத்துக் கொண்டாலும் நல்ல செயல்களை தர்ம வழியில் செய்வதில் தீங்கு இல்லையே. ஒருக்கால் பரலோகம் இருந்து விட்டால் அதர்ம வழியில் நடப்பவனுக்கு இன்னல்தானே எற்படும். பரலோகத்தை நம்பி தர்ம வழியில் இரண்டு ப்ரயோஜனங்கள் ஏற்படும் அல்லவா. கடைசி காலத்தில் புலம்புவதில் அர்த்தமில்லை.

100. **கேள்வி :** வேள்விகளில் மிக உயர்ந்த புடவைகள், பொருள்கள் அவியாகப் போடப்படிகின்றன. இவைதேவையா? சரிதானா?

பதில் : இந்த இந்த யாகங்களைச் செய்ய வழிமுறைகள் உள்ளன. அந்த யாகம் பலன் தருவற்கு அது சொல்லும் பத்ததிப்படித் தான் செய்ய வேண்டும். அதனால் சரியே. மேலும் கட்டாயப்படுத்தி போடச்சொல்லுவதில்லை. அதனாலும் சரியே.

(தொடரும்)